**"திடனாக அல்லாஹ் "கலம்" என்னும் எழுதுகோலை படைத்து அதை எழுதும்படியாக கட்டளையிட, அது; எதை எழுதுவதென்று கேட்டது. அதற்கு நடந்ததையும் இறுதிநாள் வரை நடக்கப் போவதையும் எழுதென்று கட்டளையிட்டான் என்பதாக எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொல்ல நான் கேட்டேன் என்பதாக ஹழரத் அதாஃ ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கின்றனர்."**

*(நூல் : திர்மிதி, கிதாபுல் கத்ர் பாகம்-4, பக்கம்-62.)*

இந்த ஹதீத் அல்லாஹ் முதன் முதல் கலமைத்தான் படைத்தானென்று சொல்வதோடு அதற்குமுன் வேறு ஏதோ படைக்கப்பட்டிருந்ததையும் நமக்கு குறிப்பின் மூலம் உணர்த்திக் காட்டுகிறது. அவ்வாறாயின் கலமுக்கு முன் வேறு ஏதோ படைக்கப்பட்டிருந்தாலும் கூட கலம்தான் முதல் படைப்பென்று பேசப்படுவதையும் நாம் பார்க்கிறோம். இந்நிலையில் ஸஹீஹான ஹதீத்கள் என்று பேசப்படுபவை ஒன்று இன்னொன்றுக்கு நேர் முரணான கருத்தையல்லவா காட்டுகின்றன.

இதில் "தண்ணீர் மறறும் அர்ஷுக்குப்பின் படைக்கப்பட்டவைகளில் முதன்மையானது தான் கலம்" என்னும் புகாரி ஷரீபின் விரிவுரையாளர்களில் ஒருவரான இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி ரஹிமஹுல்லாஹ்வின் கருத்தை அனைவராலும் ஏற்றுக்கொள்ள முடியுமாயின், தண்ணீர் முதல் கலம் வரையுள்ள அனைத்தும் நூரே முஹம்மதிய்யா என்னும் மூலப் பொருளைக் கொண்டுதான் படைக்கப்பட்டன என்னும் அதே புகாரி ஷரீபின் விரிவுரையாளர்களில் ஒருவரான இமாம் கஸ்த்தலானி ரஹிமஹுல்லாஹ்வின் கருத்தை ஏன் ஏற்றுக்கொள்ள முடியாது? ஆதலால் படைப்புக்களின் துவக்கம் தாஹா நபி என்பதை ஏற்றுக் கொள்ள மறுப்போர் எவராயினும் அவர் அண்ணல் நபியவர்களின் எதார்த்தத்தை மூடி மறைக்க முயலும் மூடர்களே.

மேலும் கலம் தான் முதல் படைப்பென்னும் திர்மிதி ஷரீபின் ஹதீதை ஆதாரமாகக் காட்டி அண்ணல் நபியவர்களின் அகமியத்தைப் பொய்யாக்குவோருக்கு மேற்கண்ட



அதே ஹதீதைக் கொண்டு நாம் கூற விரும்பும் இன்னுமோர் விளக்கம் யாதெனில்.,,,

கலம் என்பது ஒரு ஜடப் பொருளாகும். இதில் நடந்தவை மற்றும் நடக்கப் போகின்றவை அனைத்தும் அல்லாஹ்வுக்கு மட்டும் தான் தெரியும். அதை அல்லாஹ் யாருக்கும் தரவுமில்லை. இதில் நடந்தவைகளும் நடக்கப் போகின்றவைகளும் இறைநேசர்களான நபிமார்களுக்கும் வலிமார்களுக்கும் தெரியுமென்று சொல்வதை ஷிர்க்கென்று நம்மிலே சிலர் வாதிக்கிறார்களே! அப்படியானால் ஒரு ஜடப் பொருளான கலம் என்னும் பொருள் நடந்ததையும் நடக்கப் போவதையும் எழுதியதென்று சொல்லப்படும் வார்த்தைக்கு இவர்கள் என்ன பதில் தருவார்கள்? இல்லையில்லை! அந்த ஜடப்பொருளுக்கு அல்லாஹ் அறிவித்துக் கொடுத்தான் என்று சமாதானம் சொல்வீர்களேயாயின், அதை நம்புவீர்களேயாயின் இறைவனால் படைக்கப்பட்ட சிருஷ்டிப் பொருட்களில் எந்தவொரு சிருஷ்டிக்கும் நிகராக முடியாத ஒப்புயர்வற்ற காத்தமுன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கும் அதே அல்லாஹ் தான் நடந்ததையும் நடக்கப் போவதையும் அறிவித்துத் தந்தானென்று சொல்லப்படுவதை மட்டும் ஏற்றுக் கொள்ளும் விஷயத்தில் ஏன் பின்வாங்குகிறார்கள்?

யாரைப் படைக்காவிட்டால் எதையுமே படைத்திருக்க மாட்டேனென்று சொன்னானோ அந்த ஆதி நபியை விட ஒரு ஜடப்பொருளான கலம் இவர்களுக்குப் பெரிதாக தெரிகின்றதா? ஒன்று தெரியுமா? அந்த ரஸூலுக்கு அல்லாஹ்வால் வழங்கப்பட்ட அவ்வுயர் தன்மைகளை ஏற்றுக் கொள்ளாமல் அந்த ரஸூலை மட்டும் ஏற்றுக் கொள்வதால் ஆகப் போவது என்ன? கொஞ்சம் சிந்தியுங்கள். அத்துடன் இன்னொன்றையும் கவனிக்க வேண்டுகிறோம்.

## அறிவு தான் முதல் படைப்பு

தண்ணீரும் அர்ஷும் தான் முதன் முதல் படைக்கப்பட்டவை என்பதற்கே ஸஹீஹான ஹதீத் இருப்பதாக வாதிப்போரிடம் இல்லையில்லை. கலம் தான் முதன் முதல் படைக்கப்பட்டது என்பதற்குரிய ஸஹீஹான ஹதீதைக் காட்டி

னால் அதற்கு விளக்கம் சொல்ல முற்படுகின்றனர். அத்துடன் தண்ணீர் அர்ஷ் கலம் என்று பேசப்படும் ஹதீதையும் நாம் மறுக்கவில்லை. ஆனால் அவை ஒவ்வொன்றும் தத்தம் தமது இனத்தின் முதல் படைப்பென்று தான் சொல்கிறோம்.

பின்னும் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதிதான் முதன் முதல் அல்லாஹ்வால் படைக்கப்பட்டதென்று பேசும் ஹதீதுகளனைத்தும் பொய்யானவை. அர்ஷ் மற்றும் தண்ணீர் பற்றிய ஹதீத்கள் மட்டும் தான் நம்பிக்கைக்குரியவை என்றிருக்குமாயின் இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் நமது கருத்தைப் பொய்யாக்கி இருப்பர். ஏன் தெரியுமா? அவர்கள் தமது தகாயிக்குல் அக்பார் என்னும் நூலில் என்ன சொல்கிறார்களென்று பாருங்கள்.,,,

ومن عرق وجهه خلق العرش والكرسي واللوح والقلم
والشمس والقمر والحجاب والكواكب وما كان في السماء

**"அர்ஷோ குர்ஸியோ லௌஹோ கலமோ சூரியனோ சந்திரனோ ஹிஜாபோ நட்சத்திரங்களோ ஏன்! விண்ணிலுள்ளவை அனைத்தும் அண்ணலெம் பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருவதனத்தின் வியர்வைத் துளியிலிருந்து தான் படைக்கப்பட்டதென்று சொல் கிறார்கள்."**

இங்கே வியர்வைத் துளி என்றால் நூர் என்பதுதான் அதற்குப் பொருளாகும். எனவே ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதிதான் முதல் படைப்பு. அதிலிருந்து தான் மற்ற சிருஷ்டிகளனைத்தும் படைக்கப்பட்டன என்பது இமாம் கஸ்ஸாலியின் கொள்கையாகும். அதுதான் உண்மையும் கூட. இதன்றி.,,,

அல்லாஹ் அறிவைத்தான் முதன் முதல் படைத்தான் என்றொரு ஹதீதும் காணப்படுகிறது. இது எத்தனை தூரம் நம்பிக்கைக்குரிய ஒன்றென்பதை நம்மால் திட்டவட்டமாக சொல்ல முடியாவிட்டாலும் இதைப் பொய்யானதென்று சொல்ல முடியாது. ஏனெனில் இந்த ஹதீத் ஸுனன் தைலமி



எண்-4லும், இஹ்யா உலூமுத்தீனின் பாகம்-4, பக்கம்-99லும், இமாம் அப்துல் வஹ்ஹாப் ஷஃரானியின் அல்யவாகீத் வல் ஜவாஹிரில் பாகம்-2, பக்கம்-20லும் பதிவு செய்யப்பட்டிருப்பதேயாகும். பின்னும்.,,,

அல்லாஹ் முதன் முதல் நபியவர்களின் நூரைப் படைத்தான் என்றும், இன்னொரு ஹதீதில் அறிவைப் படைத்தான் என்றும் இருவேறு வகையாகக் கூறப்படுவதன் கருத்தென்னவென்று கேட்பீர்களாயின் இரண்டுமே ஒன்று தானென்று சொல்லப்படும். ஏனெனில் நபியவர்களைத்தான் அறிவு என்றும் நூர் என்றும் சொல்லப்படுகிறது என்பதாக இமாம் ஷஃரானி கூறுகின்றனர். இதற்கு பின்வரும் ஹதீத் ஆதாரமாகும்.

حدثنا محمد بن أحمد بن علي ثنا الحارث بن ابي أسامة ثنا داؤد بن المحبر ثنا عباد بن كثير عن ابي ادريس عن وهب بن منبه قال: قرأت إحدى وسبعين كتابا فوجدت في جميعها إن الله عز وجل لم يعط جميع الناس من بدء الدنيا الى انقضائها من العقل في جنب عقل محمد صلى الله عليه وآله وسلم إلا كحبة رمل من بين رمال جميع الدنيا وأن محمدا صلى الله عليه وآله وسلم أرجح الناس عقلا وأفضلهم رأيا

**"நான் எழுபத்தோரு நூல்களைப் படித்தேன். அதில் உலகம் தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல் இறுதிநாள் வரையுள்ள அனைத்து மனிதர்களுக்கும் வழங்கப்பட்டிருந்த அறிவானது, அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு வழங்கப்பட்ட அறிவில் ஒரு அணுவளவேயாகும். ஏனெனில் நிச்சயமாக நபியவர்கள் அறிவில் அனைவரை விடவும் மிகைத்தவர்கள். மிகச்சிறப்பான சிந்தனையைக் கொண்டவர்கள் என்பதையும் நான் தெரிந்து கொண்டேன் என்பதாக வஹ்ப் இப்னு முனப்பஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றனர்."** (நூல் : ஹுல்யத்துல் அவ்லியா பாகம்-4, பக்கம்-26, கஸாயிஸுல் குப்ரா பாகம்-1, பக்கம்-66.)

எனவே இதுவரை ஸஹீஹான ஹதீத்களில் கூறப்பட்ட தண்ணீர், அர்ஷ், கலம், லௌஹு என்பனவற்றை தனித் தனிப் பொருட்களென்று கற்பனை செய்யாமல் ஸய்யிதே! ஸர்காரே தோ ஆலமே! மேற்கண்டவை அனைத்தும் உங்கள து ஜோதியின் பிரதிபலிப்புக்களே என்னும் முடிவுக்கு வாருங்கள். இதுவே அஸ்ஸய்யித் அப்துல் காதிர் ஜீலி மற்றும் அப்துல் வஹ்ஹாப் ஷஃரானி போன்ற ஞானவான்களின் தீர்ப்புமாகும்.

ஆதலால் அண்ணலெம் பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதி தான் அல்லாஹ்வால் முதன்முதல் படைக்கப்பட்டது என்பதில் இனியும் சந்தேகம் வேண்டாம். அவர்களின் ஜோதி தான் முதல் படைப்பு. அதிலிருந்து தான் அனைத்தும் படைக்கப்பட்டன. அவர் கள் இல்லையேல் அர்ஷுமில்லை. ஆதமும் இல்லை. ஏன்! எதுவுமேயில்லை என்பதை உள்ளத்தில் ஆழமாகப் பதிய வைத்துக் கொள்ளுங்கள். முனாபிக்கீன்களான நயவஞ்சகர் களிடம் சிக்கிக் கொள்ளாதீர்கள். இன்னும் அந்த ஜோதிக்கு அப்போதே நபித்துவமும் வழங்கப்பட்டிருந்தது என்பதை யும் உளமாற நம்புங்கள். இன்னும்.,,,

“நான் நபிமார்களில் முதன்மையானவன்” என்னும் ஹதீதையும், “ஆதம் ரூஹுக்கும் ஜஸதுக்கும் இடையிலிருக் கும் போதே நான் நபியாக இருந்தேன்” என்னும் ஹதீதை யும் நம்புங்கள். இன்னும் நபியவர்களுக்கு நாற்பதாம் வயதில் தான் நபித்துவம் கிடைத்ததென்னும் நயவஞ்சகர்களின் விஷக் கருத்துக்களை குழிதோண்டிப் புதைத்து விட்டு நாற் பதாம் வயதில்தான் நபியவர்கள் தமது நபித்துவத்தை வெளிப்படுத்தினார்களென்று நம்புங்கள்.

உத்தமத் திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம வர்கள் ஆதம் நபிக்கு முன்னரே நபித்துவம் என்னும் கிரீடத் தைச் சுமந்து கொண்டிருந்தார்கள் என்பதையெல்லாம் மூடி மறைத்துவிட்டு நாற்பதாம் வயதில்தான் நபித்துவம் கிடைத்ததென்று கதை பேசுகிறார்களே இவர்கள் இன்ஜீல் வேதத்தில் நமது நபியைக் குறித்து சொல்லப்பட்டிருந்த தாக நமது வேதமாகிய குர்ஆன் சொல்வதுகூட இவர்க ளுக்குத் தெரியாமல் போய்விட்டதா? அல்லது இவர்களின்



பார்வையிலிருந்து அந்த வசனமே மறைந்துபோய் விட்டதா? இதோ குர்ஆன் கூறுவதைப் பாருங்கள்.

وإذ قال عيسى ابن مريم يابني إسـرائيل إني رسـول الله إليكم مصدقا لما بين يدي من التوراة ومبشرا برسول يأتي من بعدى إسمه أحمد فلما جائهم بالبينات قالوا هذا سحر مبين

**“மேலும் மர்யமின் மைந்தர் ஈஸா அலைஹிஸ்ஸ லாமவர்கள்” இஸ்ராயீலின் சந்ததிகளே! நான் எனக்கு முன்னுள்ள தௌராத் வேதத்தை உண்மையாக்குபவ னாகவும், எனக்குப்பின் வரப்போகும் “அஹ்மத்” என்னும் பெயருள்ள ரஸூலைக் குறித்து சுபச்செய்தி அறிவிப்பவனாகவும் அல்லாஹ்வின் ரஸூலாக உங்க ளிடம் வருகை தந்துள்ளேன் எனக்கூறியதை நபியே நீர் எண்ணிப்பாரும். எனினும் அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளை அவர் கொண்டுவந்த போதிலும் அவர்கள் “இது தெளிவானதோர் சூனியமாகும்” எனக் கூறினர்.** ஸூரா அஸ்ஸஃப்ஃபு, வசனம்-06.)

இவ்வசனத்தில் ஸய்யிதுனா ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்கள் தனது சமூகத்தாரை நோக்கி நான் உங்களுக்காக அனுப்பப்பட்ட ரஸூலென்று பிரச்சாரம் செய்ததோடு, எனக்குப்பின் ஒருரஸூல் வருவார். அவருடைய பெயர் அஹ்மத் என்று சுபச்செய்தி அறிவித்ததையும் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

ரஸூல் என்பது மட்டுமல்ல. பல நூற்றாண்டுக்கு முன்பே “அஹ்மத்” என்பதாகப் பெயர் சூட்டப்பட்டிருந்ததாகச் சொல்லப்படும் ஒருவருக்கு நாற்பதாவது வயதில்தான் நபித்துவம் கிடைத்ததென்று சொல்வது கடைந்தெடுத்த மடத்தனம் என்பதைவிட வேறென்னவாக இருக்க முடியும்? இன்னும் நபியவர்கள் பிறக்கு முன்பே நபித்துவம் கொடுக் கப்பட்டவர்களாக இருந்தார்கள் என்னும் குர்ஆனின் கூற்றைப் பொய்யாக்கி நாற்பதாம் வயதில்தான் நபித்துவம் கிடைத்ததென்று கூறும் இவர்கள் புனிதமிகு இஸ்லாத்தில் புதியதோர் கொள்கையைப் புகுத்தும் குற்றவாளிகள் என்

பதை இப்போதாவது புரிந்து கொள்ளுங்கள்.

இதுவரை கூறப்பட்ட விஷயங்கள் வள்ளல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களின் "கில்கத்" படைப்பு சம்பந்தமாகப் பேசப்பட்டவைகளாகும். ஆம். அவர்கள் அல்லாஹ்வைக் கொண்டு ஜோதியாகப் படைக்கப்பட்ட முதல் சிருஷ்டி என்பதை மீண்டும் திரும்பத் திரும்பக் கூறிய வர்களாக ஜோதியாகப் படைக்கப்பட்ட அம்முதல் சிருஷ்டி இப்புவியில் எப்போது எப்படி உதயமாயிற்று என்பதைக் குறித்த சில ஆதாரப்பூர்வமான தகவல்களை இப்போது பார்ப்போம்.

## இதய நபியின் உதயம்

அல்லாஹ்வின் நூராகிய ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதி தனது ரட்சகனின் விருப்பப்படி உலவிக் கொண்டிருந்ததாகவும் பின்னர் அந்த ஜோதியி லிருந்தே பல்வேறு வகைப்பட்ட அர்ஷ், லௌஹ், கலம் போன்றவை படைக்கப்பட்டதாகவும் முன்னால் நாம் பார்த்தது உங்களுக்கு நினைவிலிருக்கலாம். அதன்பின் அந்த ஜோதியை அல்லாஹ் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர் களின் முதுகந்தண்டில் வைத்தான். அது அவர்களின் நெற்றியில் பிரகாசிக்க அதைக்கண்ட அமரர்கள் ஆதம் நபியவர்களை வலம் வரத்துவங்கினர். அதன்பின் அந்த ஜோதியைக் குறித்து அல்லாஹ் தனது மாமறையில்.,,,

وتقلبك فى الساجدين

**"நபியே! நீர் சிரம் பணிந்தவர்களோடு இயங்குவ தையும் அல்லாஹ் பார்க்கிறான்."**

(அஷ்ஷுஃஅரா வசனம்-219.)

இவ்வசனத்திற்கு குர்ஆனின் விரிவுரையாளர் அல்லாமா சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள்,....

إنه كان ينقل نوره من ساجد الى ساجد

**"நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுடைய ஜோதியானது அல்லாஹ்வுக்கு ஸஜ்தா**



**செய்வோரில் ஒருவரிடமிருந்து இன்னொருவரளவில் மாற்றப்பட்ட வண்ணமாயிருந்தது என்று கூறுகிறார் கள்.."** (நூல்: அல்ஹாவி லில் பதாவா பாகம்-2, பக்கம்-210, மஸாலிகுல் ஹுனபா)

எனவே பேரொளிப் பெருந்தகை ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதி அல்லாஹ்வுக்கு முற்றி லும் வழிப்பட்ட நல்லடியார்களிடையே ஒருவர்பின் ஒருவ ராக இடம்மாறிக் கொண்டேவந்து இறுதியாக அப்துல் லாஹ் ரலியல்லாஹு அன்ஹுவை வந்தடைந்தது. அவர்கள் நபியவர்களின் ஜோதியைச் சுமந்திருந்ததால் ஹழ்ரத் அப்துல் முத்தலிப் ரலியல்லாஹு அன்ஹுவால் அல்லாஹ் வுக்காக செய்து கொள்ளப்பட்ட நேர்ச்சையிலிருந்து நூறு ஒட்டகங்களுக்குப் "பகரமாகப்." பாதுகாக்கப்பட்டார்கள்.

பின்னும் நபியவர்களின் ஜோதியைச் சுமந்திருந்த அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் குறைஷி யர்களிலேயே மிகப்பெரும் அழகு வாய்ந்தவர்களாக இருந்த தால் அவர்களை அடைவதற்கு பெண்கள் பெரிதும் போட்டி யிட்டனர். இதுபற்றி இமாம் பைஹகீ, இப்னு கதீர் போன் றோர் கூறுவதைப் பாருங்கள்.,,,

وكان عبد الله أحسن من رؤي في قريش قـــط فخرج يوما على نساء من قريش مجتمعات فقالت إمرأة منهن: يا نساء قـــريش أيتكن تتزوج هذا الفتى فتصطاد النور الذي بين عينيه؟ وإن بين عينيه نورا

**"குறைஷி வம்சத்தில் அப்துல்லாஹ்வை விட அழகு வாய்ந்தவர் வேறு யாருமிருக்கவில்லை. ஒரு முறை குறைஷிப் பெண்களுக்கு மத்தியில் அவர்கள் சென்றபோது, அப்பெண்களில் ஒருத்தி "இவரை மண முடித்து." இவரது இரு கண்களுக்கிடையேயும் இலங்கி கொண்டிருக்கும் "நூரை." (ஜோதியை) வேட்டையாடு பவர் யார்? திடனாக இவரது கண்களுக்கிடையே ஜோதி இலங்கிக் கொண்டிருக்கிறது என்றாள்.."**

(நூல் : தலாயிலுன் நுபுவ்வத் பாகம்-1, பக்கம்-87.)

இதன்பின் ஹழ்ரத் அப்துல் முத்தலிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹழ்ரத் அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹாவுக்கு திருமணம் செய்து வைப்பதற்காக அழைத்துக் கொண்டு போகும்போது வழியில் அப்துல்லாஹ் அவர் களைக் கண்ட பெண்ணொருத்தி தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தியதோடு பின்தொடரவும் செய்தாள். பின்பு அன்னை ஆமினாவுக்கும் அப்துல்லாஹ் அவர்களுக்கும் திருமணம் நடைபெறவே அப்துல்லாஹ் அவர்களின் நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருந்த அப் பேரொளி அன்னை ஆமினாவுக்குள் இடம் பெயர்ந்தது. பின்பு அப்துல்லாஹ் அவர்களை வழியில்கண்டு தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்திய அதே பெண் மீண்டும் அவர்களைக் கண்டபோது பார்த்தும் பாராதது போல் இருப்பதைக் கண்ட அவர்கள்.,,,

நேற்று என்னைக் கண்டபோது இடைமறித்தாயே! இன்று ஏன் எதுவுமே பேசாமல் போகிறாய். உனக்கென்ன நடந்ததென்று கேட்க, அதற்கந்த பெண் சொன்ன பதில்.,,,

فقالت له فارقك النور الذي كان معك بالأمس فليس لي بك حاجة

**நேற்று உமக்குள்ளே நான் கண்ட அந்த "நூர்" (ஜோதி) இப்போது உம்மை விட்டும் பிரிந்து விட்டது. ஆகையால் எனக்கு இனி நீர் அவசியமில்லை" என்றாள்.**
*(நூல் : அல் பிதாயா வன் நிஹாயா பாகம்-1, பக்கம்-249., தபகாத் இப்னு ஸஃத் பாகம்-1, பக்கம்-96,97.)*

இன்னும் "பரிசுத்த முதுகந்தண்டிலிருந்து தூய்மையான கர்ப்பரையை நோக்கி மாறிமாறி வந்து கொண்டிருந்தேன்." என்னும் நபியவர்களின் வாக்குக்கேற்ப இறுதியாக அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹாவின் பரிசுத்தமான கர்ப்ப ரையை வந்தடைந்தது.

மேலும் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதியை அல்லாஹ்வின் நல்லடியார் களுக்குள்ளேயே தான் புரட்டிக் கொண்டிருந்தோம் என்ப



தாக அல்லாஹ் கூறுகிறான். நான் அல்லாஹ்வுக்கு அடி பணிந்து அவனுக்கு சிரம் பணிபவர்களுக்கு மத்தியில் தான் இருந்து வந்தேன் என்று நபியவர்களும் கூறுகின்றனர். இந் நிலையில் நபியவர்களின் பெற்றோரை கொஞ்சங்கூட நா கூசாமல் (நவூது பில்லாஹி மின்ஹா) நயவஞ்சகர்களின் கூட்டமொன்று நரகவாதிகள் என்றும் பேசுகிறது.

இது ஒரு பக்கமிருக்க, அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹாவை அந்த ஜோதி வந்தடைந்த போது, அன்னை அவர்கள் ஒரு மிகப் பிரம்மாண்டமான பிரகாசத்தைக் கண்டனர். இதேபோன்று நபியவர்கள் இவ்வவனியில் உதயமான தினத்தன்றும் கண்டார்கள். இது அடுத்து வரும் ஹதீதைக் கொண்டு உறுதிப்படுத்தப்படுகிறது.

أخبرنا عليّ بن الحسين بن سليمان بالفسطاط حـــدثنا الحارث بن المسكين حدثنا ابن وهب قال: وأخبرني معاوية بن صالح عن سعيد بن سويد عن عبـــد الاعلى بـــن هلال السلمى عن العرباض بن سارية الفزاري قال: سمعت رسول الله صلى الله عليه وآله وسلم يقول: إني عند الله مكتوبا بخاتم النبيين وإن آدم لمنجدل في طينته وسأخبركم بـــأول ذالك دعوة ابراهيم وبشارة عيســـى ورؤيا أمي التي رأت حـــين وضعتني أنه خرج منها نور أضائت لها منه قصور الشام

**நிச்சயமாக நான் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் களிமண்ணாக இருக்கும்போதே நபிமார்களில் இறுதி நபியாக இருந்தேன். இன்னும் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாமவர்களின் பிரார்த்தனையும், ஈஸா அலைஹிஸ் ஸலாமவர்களின் சுபச்செய்தியும், ஷாம் தேசத்து கோட் டையின் கொத்தளங்கள் தெரியுமளவிற்கு வெளிப் பட்ட பிரகாசமாகிய எனது தாயாரின் கனவும் நானே என்று நவின்றார்கள் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்.** *(அ-ர் ஹழ்ரத் இர்பாழ் பின் ஸாரியா ரலியல்லாஹு அன்ஹு)*

قال ابن اسحاق حدثني ثور ابـــن يزيد عن خالد بـــن معدان عن أصحاب رسول الله صلى الله عليه وآله وسلم إنهم قالوا: أخبرنا عن نفسك قال نعم أنا دعوة إبي إبراهيم وبشرى عيسى عليه السلام ورأت أمي حين حملت بي أنه خرج منها نور أضائت له قصور الشام

**"அல்லாஹ்வின் ரஸூலே! உங்களைப்பற்றி சொல்லுங்கள் எனத்தோழர்கள் கேட்டபோது, அதற்கு நபியவர்கள்; நானே எனது தந்தை இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் பிரார்த்தனையுடைய பிரதிபலனும், ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களின் சுபச் செய்தியும், என்னை எனது தாயார் சுமந்திருந்தபோது ஷாம் தேசத்து கோட்டையின் கொத்தளங்கள் தெரியுமளவிற்கு வெளிப்பட்ட நூர் சம்பந்தமான கனவும் என்று சொன்னார்கள்.** *(அ-ர் ஹழ்ரத் காலித் பின் மஃதான்)*

*(நூல் : தலாயிலுன் நுபுவ்வத், இமாம் பைஹகீ பாகம்-1, பக்கம்-80,83. ஸஹீஹ் இப்னி ஹிப்பான் பாகம்-14, பக்கம்-313. குதூப் மின் ரியாழிஸ் ஸீரந்நபவிய்யா பக்கம்-24. தப்ரானி முஃஜமில் கபீர் பாகம்-18, பக்கம்-252. முஸ்னத் அஹ்மத் பின் ஹன்பல் பாகம்-5, பக்கம்-843, என்-17281. அல் பிதாயா வன் நிஹாயா பாகம்-2, பக்கம்-293, 294. ஹாதல் ஹபீப் பக்கம்-64. ஸுர்கானி அலல் மவாஹிப் பாகம்-1, பக்கம்-656. தபகாத் இப்னு ஸஃத் பாகம்-1 பக்கம்-150. இதனை இமாம் ஹாகிம் ரஹிமஹுல்லாஹ் அவ்ர்கள் குறிப்பிட்டு விட்டு, "ஹாதா ஹதீதுன் ஸஹீஹுல் இஸ்னாதி." இது சரியானதோர் வரிசைத் தொடரைக் கொண்ட ஸஹீஹான ஹதீதாகும் என்று கூறுகின்றனர். இன்னும் இமாம் தஹ்பியும் இதை அங்கீகரித்துள்ளார்.*

*இந்த ஹதீதில் கவனிக்கப்பட வேண்டிய மிக முக்கியமான மற்றுமோர் விஷயம் யாதெனில் நபியவர்கள் ஸய்யிதுனா இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களை "அபீ" (தந்தை) என்று குறிப்பிடுவதைக் கவனிக்க வேண்டும்.*

*அவ்வாறாயின் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி*



*வஸல்லமவர்கள் தமது தந்தையான அப்துல்லாஹ் அவர்களைத் தவிர்த்து வேறொருவரையும் தந்தையெனக் கூறுகிறார்கள் எனில், இந்நிலையில் "எனது தந்தையும் நரகத்தில் தான்." என்னும் ஹதீதில் இடம் பெற்றுள்ள தந்தை என்னும் பதத்திற்கு தமது தந்தையான அப்துல்லாஹ் அவர்களல்ல. வேறொருவராகும் என்பதாக ஹதீதுக்கலை விரிவுரையாளர்கள் கூறும் விளக்கத்தை சிலர் ஏன் ஏற்க மறுக்கின்றனர்? பின்னும் நபியவர்களின் பரிசுத்தமான பெற்றோர் தொடர்பாக மேலும் விளக்கங்கள் வேண்டுவோர் நமது மற்றுமோர் வெளியீடான "சுந்தர நபியின் சுவனத்துப் பெற்றோர்" என்னும் நூலைப் பார்வையிடுக. அடுத்து மற்றுமோர் ஆதாரத்தையும் பாருங்கள்.,,,*

عن عطاء بن يسار عن أم سلمة عن آمنة قالت لقد رأيت ليلة وضعته نورا أضائت له قصور الشام حتى رأيتها

**அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹா கூறுகின்றனர். "நான் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப் பெற்றெடுக்கவிருந்த இரவன்று ஒரு பிரகாசத்தைக் கண்டேன். அது ஷாம் தேசத்து கோபுரங்களைக் காணுமளவுக்கு பிரகாசமாக இருந்தது.."** *(நூல் : மவாஹிப், ஸுர்கானி பாகம்-1, பக்கம்-219, தபகாத் இப்னு ஸஃத் பாகம்-1 பக்கம்-102.)*

عن عثمان بن ابي العاص عن أمه أم عثمان الثقفية وإسمها فاطمة بنت عبد الله قالت: لما حضرت ولادة رســول الله صلى الله عليه وآله وسلم رأيت البيت حين وقع قــد إمتلأ نورا ورأيت النجوم تدنوا حتى ظننت انها ستقع علي

இதுபோன்றே **"அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹா கூறுகின்றனர். திங்களெங் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இப்புவியில் உதயமாகும் நேரம் அண்மித்தபோது வீடு முழுவதும் பிரகாசத்தால் நிறைந்து காணப்பட்டது. அதுபோது நட்சத்திரங்களையும் கண்டேன். அவை எனக்கு மிக நெருக்கத்**

**திலிருப்பதாக நினைத்தேன்."** *(அ-ர் பாத்திமா பின்த் அப்
தில்லாஹ், நூல் : மவாஹிப், ஸுர்கானி பாகம்-1, பக்கம்-218,
அல் பிதாயா வன் நிஹாயா பாகம்-2, பக்கம்- 264.)*

எனவே இறைவனால் முதன் முதல் ஜோதியாகப் படைக்
கப்பட்ட நமது நாயகம் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு
அலைஹி வஸல்லமவர்களின் அந்த ஜோதி அன்னை
ஆமினா ரலியல்லாஹ்வின் புனிதமிகு கர்ப்பப்பைக்கு வந்து
சேர்ந்து இவ்வுலகில் உதயமாகும் நாள்வரை ஒளிமயமாகப்
பிரகாசித்தது மட்டுமின்றி தினந்தோறும் கனவில் நபிமார்
களும் வானவர்களும் வருகைதந்து சுபச்செய்தியும் தந்துள்
ளனர். இவையனைத்தும் நமது நபியவர்கள் ஜோதி மய
மானவர்கள் என்பதையும் அவர்களது பரிசுத்தமான பெற்
றோர்கள் முஃமின்கள் என்பதையும் உறுதிப்படுத்துவதை
பொய்யென்று சொல்ல முடியுமா? பின்னும் உங்களில்
யாராவது இதனைப் பொய்யென்று வாதிப்பீர்களேயாயின்
இறைவன் மீதாணையாக அவர்கள் உண்மையான முஃமின்
களாகவே இருக்க முடியாது.

மேலும் ஜோதி மயமான நபியவர்கள் தமது அன்னை
வழியாக மனித கோலத்தில் ரபீவுல் அவ்வல் பிறை 12ம்
நாளன்று உதயமானார்கள். இன்னும் அந்த ஜோதி மனித
கோலத்தில் வெளியான போதிலும் அதற்கு எந்தவொரு
மனிதனும் சமமாக முடியாதென்பதை நிரூபித்துக் காட்டும்
வண்ணம் அதிசயமான விதத்தில் பிறந்து காட்டினார்கள்.
இது போன்றதொரு குழந்தை இவ்வுலகில் இதுவரை பிறக்க
வில்லை. இனி பிறக்கப் போவதுமில்லை. இதோ எப்படி
அந்த ஜோதி இவ்வுலகில் உதயமாயிற்று என்பதற்குரிய
ஆதாரங்களைப் பாருங்கள்.

இன்னும் ரபீவுல் அவ்வல் 12ம் நாளன்று நபியவர்கள்
உதயமானார்கள் என்பதைக்கூட ஒரு கூட்டம் ஏற்க மறுக்
கின்றது. ஆனால் இன்று உலகையே ஆட்டிப் படைத்துக்
கொண்டிருக்கும் கம்ப்யூட்டர் பனிரெண்டாம் நாள்தான்
என்பதை உறுதிப்படுத்துகிறது. இதனை ஏற்க மறுக்கும்
கூட்டத்தைச் சார்ந்தவர்களில் ஒருவரான அபுல் ஹஸன்
நத்வி என்பவர் தமது அஸ்ஸீரத்துன் நபவிய்யா என்னும்
நுலின் 99ம் பக்கத்தில் 12ம் நாள் திங்கட்கிழமை தானென்று



*கூறுகிறார். இப்போது அடுத்துவரும் ஹதீதைப் பாருங்கள்.,,,*

عن ابن عباس عن أبيه العباس بن عبد المطلب رضي الله
عنه قال: ولد رسول الله صلى الله عليه وآله وسلم
مختونا ومسرورا

**"ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி
வஸல்லமவர்கள் கத்னா செய்யப்பட்டவர்களாகவும்,
தொப்புள்கொடி அறுக்கப்பட்டவர்களாகவும் உதயமா
னார்கள்."** *(நுல்: அல் பிதாயா வன் நிஹாயா பாகம்-2, பக்
கம்-265, ஸுர்க்கானி பாகம்-1, பக்கம்-232, இப்னு அஸாகிர்
தப்ரானி, அபூநயீம் கதீப், ஹாதல் ஹபீப் பக்கம்-64, ஹாகிம்
பாகம்-2, பக்கம்-657, இப்னு ஸஃத் பாகம்-1, பக்கம்-103.)*

*தொப்புள் கொடி அறுக்கப்பட்டவர்களாக நபியவர்
கள் உதயமானது கூட அவர்கள் ஒரு ஜோதி மயமானவர்
கள் தானென்பதை நமக்கு தெளிவுபடுத்திக் காட்டுகிறது.
எப்படித் தெரியுமா? இவ்வுலகில் பிறக்கின்ற எல்லா குழந்தை
களும் அவை பிறந்ததும் அவைகளின் தொப்புள் கொடியை
நாம்தான் துண்டிக்கிறோம். ஏனெனில் அக்கொடியின்
மூலமாகத்தான் தாயின் வயிற்றிலுள்ள குழந்தைக்கு ஆகா
ரம் செல்கிறது. ஆனால் நபியவர்கள் தாயின் வயிற்றிலிருக்
கும் போது கூட ஆகாரம் எதுவுமின்றி கர்ப்பப்பையில்
வாழ்ந்து பிறக்கும் போது அந்தத் தொப்புள் கொடிக்குச்
சம்பந்தமில்லாதவர்களாகப் பிறந்தார்கள்.*

*அது மட்டுமல்ல. தலைக்கு எண்ணை இடப்பட்டவர்
களாகவும் தமது கண்களை வானத்தின் பக்கம் உயர்த்திய
வர்களாகவும் தமது கலிமா விரலை உயர்த்தி ஏகத்துவத்தை
உண்மையாக்கியவர்களாகவும் மர்மஸ்தானத்தின் வழியா
கப் பிறக்காமல் தொப்புளுக்கும் மர்மஸ்தானத்துக்கும்
இடையில் உதயமானார்கள். இப்படியொரு குழந்தை பிறந்
ததை வரலாற்றில் எங்காவது காட்ட முடியுமா? அறவே
இல்லையெனில் பின் எப்படி அந்த நபியை உன்னைப்
போன்றவரென்று வாதிக்கிறாய்? இதுதான் அகிலத்தின்
அதிபரான அண்ணலெங் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி
வஸல்லமவர்கள் இவ்வவனியில் உதயமான முறைபற்றிய*

விளக்கமாகும். வாருங்கள். அடுத்து நாம் சொல்லப் போகும் விஷயம் என்ன தெரியுமா?

## ஜோதியா? மனிதரா?

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் தான் அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப் பட்ட ஜோதி என்பதை இதுவரை நாம் தந்த விளக்கங் களைக் கொண்டு நிரூபித்துக் காட்டினோம். ஆனால் அந்த ஜோதிதான் ரபீவுல் அவ்வல் மாதம் 12ம் நாளன்று அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹாவின் வழியாக மனித உருக்கொண்டு வெளியாயிற்று என்பதாகக் கூறுகிறீர்களே! இது எப்படிச் சாத்தியமாகும் என்று யோசிக்கிறீர்கள் அல்லவா. இதற்குரிய விடையை நீங்கள் பார்க்க வேண்டு மாயின் இந்நூலின் ஆரம்பப் பகுதிக்கு மீண்டும் திரும்பிப் போங்கள். அங்குதான் அதற்குரிய விடை இருக்கின்றது. இருப்பினும் அந்த சிரமத்தை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டாமென்பதற்காக ஆரம்பத்தில் நாம் என்ன சொன் னோம் என்பதை இங்கே சுருக்கமாக உங்களின் பார்வைக் குத் தருகிறோம். அதாவது...

மனித இனம் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களைக் கொண்டே துவக்கப்பட்டிருந்தாலும் அவ்வினத்திலுள்ள ஒருவர் இன்னொருவருக்குச் சமமாக முடியாது. ஏனெனில் அவர்களில் ஒருவர் கலீலுல்லாஹ்வாகவும், இன்னொருவர் கலீமுல்லாஹ்வாகவும், வேறொருவர் ரூஹுல்லாஹ்வாக வும் வித்தியாசப்படுத்தப்பட்டிருப்பதை புரிந்திருப்பீர்கள்.

இதில் கலீலுல்லாஹ்வாகிய இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாமவர்கள் ஒரு மனிதராகத்தானே காட்சியளித்தார் கள்? இதேபோன்று கலீமுல்லாஹ்வாகிய மூஸா அலைஹிஸ் ஸலாமவர்களும் ஒரு மனிதராகக் காட்சி தரவில்லையா? அட. இதையெல்லாம் விட இறைவனின் ஆன்மா என்று பேசப்பட்ட ரூஹுல்லாஹ்வாகிய ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்களும் ஒரு மனிதராகப் பிறந்து வாழ்ந்தும் காட்டவில் லையா? இதையெல்லாம் நம்மால் நம்ப முடிகிறதென்றால் அல்லாஹ்வின் ஜோதியென்று பேசப்படும் நூருல்லாஹ் வாகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்



கள் மட்டும் ஒரு மனிதராக ஏன் பிறந்து காட்சியளிக்க முடியாது?

கலீலுல்லாஹ், கலீமுல்லாஹ், ரூஹுல்லாஹ் போன்ற வர்களை எல்லாம் ஒரு தாயின் வழியாகப் பிறக்கச் செய்து மனித இனத்தாரிடையே ஒரு மனிதராக வாழவைக்க முடிந்த மாட்சிமை மிக்க அல்லாஹ்வால் தனது ஜோதியாகிய நூருல்லாஹ்வையும் ஒரு மனிதராக மனித கோலத்தில் ஏன் வாழவைக்க முடியாது? நிச்சயமாக அல்லாஹ்வால் முடி யும். அவன் எதையும் செய்வதற்குரிய ஆற்றலைக் கொண்டி ருப்பவன். இதுதான் அவனைப் பற்றிய அடிப்படை நம்பிக் கையும் கூட.

இருப்பினும் நம்மிடையேயுள்ள சிலர், ஒளி என்பது உருவமற்றது. அதற்கென்று தனிப்பட்ட உருவம் என்பது எதுவுமில்லை என்பதால் நபியவர்கள் நூரானிய்யத்தான வர்களல்ல. வெறும் மனிதர் மட்டுமே என்று வம்பு பேசு கின்றனர். இவர்கள் சாதாரணமானவர்களல்ல. சகல ஆற்ற லுக்கும் சொந்தக்காரனான அல்லாஹ்வின் வல்லமைக்கே வேட்டு வைப்பவர்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏனெனில் இவர்களின் வாதம் எத்தனை தூரம் தவறான ஒன்றென்பதையும் நிச்சயமாக அல்லாஹ் தனது ஹபீபை தன் ஜோதியிலிருந்து தான் படைத்தான் என்பதையும், என்ற போதிலும் அவர்கள் இப்பூமியில் மனிதராகவே காட்சி தந்தார்கள் என்பதையும் நிரூபிக்க ஒருசில ஆதாரங்களை உங்களின் மேலான பார்வைக்குத் தருகிறோம்.

إن آدم عليه السلام لما حضره الموت قال لبنيه: أى بـــنيّ إني اشتهى من ثمار الجنة فذهبوا يطلبـــون له فاستقبـــلتهم الملائكة ومعهم أكفانه وحـــــــــنوطه ومعهم الفؤوس والمساحي والمكاتل فقالوا لهم يابـــني آدم ما تريدون وما تطلبون؟ أو ما تريدون؟ وأين تذهبون؟ قالوا أبونا مريض فأشتهي من ثمار الجنة قالوا لهم إرجعوا فقد قضي قـــضاء

ابـــيكم. فجاءوا فلما رأتهم الحواء عرفتهم فلاذت بـــآدم فقال: إليك عني فإني إنما أوتيت من قبلك خلي بيني وبـــين ملائكة ربّي تبارك وتعالى فقبـــضوه وغســـلوه و كفنوه وحنطوه و حفروا له وألحدوا له وصلوا عليه ثم دخلوا قبره فوضعوه في قبره ووضعوا عليه اللبن ثم خرجوا من القبر ثم حثوا عليه التراب ثم قالوا: يابني آدم هذه سنتكم

"ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரியும் வேளை வந்தபோது அவர்களுக்கு சுவனத்திலுள்ள கனிகளை உண்ண வேண்டுமென்று விருப்பமேற்பட்டது. அதைத் தமது புதல்வர்ளை அழைத்துச் சொல்லவே, அவர்கள் அக் கனிகளை தேடிக்கொண்டு சிறிது தூரம்கூட சென்றிருக்க மாட்டார்கள். அதற்குள் ஆண்களின் தோற்றத்தில் வானவர்களின் கூட்டமொன்று கபனுக்குரிய துணிகளைச் சுமந்தவர்களாக அவர்களை அணுகி, எங்கே போகிறீர்களென்று கேட்க, அதற்கவர்கள் தாம் செல்லும் நோக்கத்தைச் சொல்ல, அதற்கந்த வானவர்கள்; நீங்கள் வீடு திரும்புங்கள். உங்களது தந்தையின் காலம் முடிந்து விட்டதென்றனர். அதுகேட்டு அவர்களும் அமரர்களும் ஆதம் நபியவர்களின் வீட்டை நோக்கி வருவதைக் கண்ட ஹவ்வா அலைஹஸ்ஸலாமவர்கள் விஷயத்தைப் புரிந்து கொண்டார்கள்.

இருப்பினும் நபிமார்களுக்கு அவர்களின் விருப்பப்படி மரணிக்கும் உரிமையுண்டு என்பதால் ஹவ்வா அவர்கள் நபியவர்களிடம் மரணத்தை சிறிது தள்ளிப் போடலாமே என்பது போல சைகை செய்ய, அதற்கவர்கள்; தன்னை அமரர்களிடம் ஒப்படைக்குமாறு கட்டளையிட்டனர்.

அதன்பின் நபியவர்களின் ரூஹ் கைப்பற்றப்பட்டு அவர்களை நல்லடக்கம் செய்வதற்குரிய சகல ஆயத்



தங்களையும் அமரர்களே செய்யத் துவங்கி, கப்ரைத் தோண்டினார்கள். மேலும் நபியவர்களைக் குளிப்பாட்டி அவர்களுக்குக் கபனிட்டு தொழ வைத்தபின் கப்ருக்குள் வைத்தார்கள் அப்போது அதன்மேல் ஒரு பொருளையும் வைத்து விட்டு கப்ரைவிட்டு வெளியே வந்து மண்ணைப் போட்டு கப்ரை மூடினார்கள். இது அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த புதல்வர்களை நோக்கி இதுதான் இறுதிக் கிரியைகளுக்குரிய முறைகளாகும் எனக்கூறி விட்டு சென்றார்கள்." (நூல்: அல் பிதாயா வன் நிஹாயா பாகம்-1, பக்கம்-96.)

பின்னும் இதைக் குறிப்பிடும் இந்நூலாசிரியர் இப்னு கதீர் அவர்கள் இதனை "ஸஹீஹு"ல் இஸ்னாதி இலைஹி." (இதன் வரிசைத் தொடர் உண்மையானதாகும்) எனக் கூறியிருப்பது இங்கே கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். இன்னும் இந்த ஹதீதுக்கு "ஸஹீஹ் அல் கிஸஸு"ன் நபவி" என்னும் நூலின் 26ம் பக்கத்தில் தரப்பட்டுள்ள விளக்கத்துடனேயே பொருள் கூறப்பட்டுள்ளதையும் கவனிக்க வேண்டும். மேலும் இந்த ஹதீத் மஜ்மவுஸ் ஸவாயித் என்னும் நூலில் 8ம் பக்கத்திலும், 199ம் பக்கத்திலும் குறிப்பிடப் பட்டுள்ளது. அத்துடன் இமாம் இப்னு ஹஜர் ஹைதமி அவர்கள் இதைப்பற்றி கூறும்போது, இதை இமாம் அப்துல்லாஹ் பின் அஹ்மத் என்பவர் முன்மொழிந்துள்ளார். அதேநேரம் அறிவிப்பாளர்களில் அதபீ பின் ழமுரா என்பவரைத் தவிர மற்றவர்களனைவரும் நம்பிக்கைக்குரியவர்களாகும் என்றும் இருப்பினும் ழமுரா ஸிகத்தானவரே என்றும் கூறுகின்றனர்.

அடுத்து ஸய்யிதுனா லூத் அலைஹிஸ்ஸலாமவர்களிடம் வானவர்களில் சிலர் அழகான வாலிபர்களின் தோற்றத்தில் விருந்தினர்களாக வருகை தந்தனர். அந்த நபியவர்களின் சமூகத்தார் மகாக் கொடூரமானவர்களாதலால் அவர்கள்மீது நபியவர்கள் மிகவும் வெறுப்புற்றிருந்தனர். லூத் நபியவர்களின் இல்லத்திற்கு விருந்தாளிகள் வந்துள்ளனர் என்பதைக் கேள்விப்பட்ட அவர்கள் அங்கே விரைந்து வந்தனர். அதுபோது அதைக்கண்ட நபியவர்கள் என்ன செய்தார்கள் என்பதைக் குர்ஆன் இப்படிக் கூறுகின்றது. அதாவது,...

"தனது மூன்று புதல்விகளையும் அவர்கள் முன் நிறுத்தி என் சமூகத்தாரே! இதோ இவர்கள் எனது புதல்விகள். இவர்கள் உங்களுக்கு (திருமணத்திற்குப்) பரிசுத்தமானவர்கள். எனவே நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். என் விருந்தினரது விஷயத்தில் நீங்கள் என்னை அவமானப்படுத்தாதீர்கள். உங்களில் நல்ல மனிதர் ஒருவர்கூட இல்லையா?." என்று கூறினர்.

அதற்கு (அம்மக்கள்) "உங்களது புதல்வியரில் எங்களுக்கு எந்தத் தொடர்புமில்லை. நாங்கள் விரும்புவது என்னவென்பதை நீர் அறிவீர் என்று சொன்னார்கள்." *(சூரா ஹூத் வசனம்-78, 79. ஸஹீஹ் கிஸஸுன் நபவி பக்கம்-63.)*

عن أبي هريرة رضى الله عنه قال أرسل ملك الموت الى موسى عليه السلام فلما جائه صكه ففقأ عينه فرجع الى ربه فقال أرسلتني الى عبد لايريد الموت فقال: فردالله اليه عينه

அடுத்து "ஹழ்ரத் இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் ஸய்யிதுனா மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களிடம் வருகை தந்தபோது, மூஸா நபியவர்கள் அவரை அடிக்கவே, அவர் பின்பகுதி அடிபடுமளவிற்கு கீழே விழுந்தார்கள். அதில் அவரது கண்ணும் சேதமடைந்தது. அதே நிலையில் அல்லாஹ்வின் சமூகத்தில் ஆஜராகி மரணத்தை விரும்பாத ஒருவரிடம் என்னை ஏன் அனுப்பி வைத்தாய்? என்று கேட்க, பின்பு அல்லாஹ் அவரது கண்ணைத் திருப்பிக் கொடுத்தான்." *(நூல் : புகாரி ஷரீப், முஸ்லிம் ஷரீப் கிதாபுல் பழாயில், பாபு மின் பழாயிலி மூஸா அலைஹிஸ்ஸலாம். இக்மால் பாகம்-7, பக்கம்-351.)*

عن ابي هريرة رضى الله عنه عن النبي صلى الله عليه وآله وسلم أن رجلا زارأخا له في قـــرية أخرى فأرصده الله له على مدرجته ملكا فلما أتي عليه قال أين تريد؟ قـــال أريد



أخالي في هذه القرية قال هل لك عليه من نعمة تربها؟ قال لاغير إني أحببته فى الله عز وجل قال فإني رســـول الله اليك بأن الله قد أحبك كما أحببته فيه

இதுபோன்றே "அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறினர். ஒருவர் வேறொரு கிராமத்தில் வசிக்கும் தமது தோழனைச் சந்திப்பதற்காக சென்று கொண்டிருந்தார். வழியில் இடைமறித்த ஒருவர் எங்கே போகிறீரென்று கேட்க, நண்பனைச் சந்திப்பதற்காக செல்கிறேனென்று சொல்ல, அதற்கவர்; உமது நண்பனிடம் ஏதேனும் தேவையைக் கருதி செல்கிறீரா? என்று கேட்க, அதற்கவர்; அல்லாஹ்வுக்காக அவரை விரும்புகிறேன். அதன் பொருட்டே அவரைச் சந்திக்கச் செல்கிறேன். வேறு நோக்கம் எதுவுமில்லை என்று சொல்ல, அதற்கந்த மனிதர்; நான் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட வானவர். நிச்சயமாக அல்லாஹ் உன்னை விரும்புகிறான் என்று கூறினார்." *(அ-ர் ஹழ்ரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு. நூல் : முஸ்லிம் ஷரீப் கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலத்தி வல் ஆதாபி, பாபு ஃபீ ஃபழ்லில் ஹுப்பி ஃபில்லாஹ் பாகம்-8 பக்கம்-35.)*

இவ்வாறே "ஒரு பட்டணத்திலிருந்த ஒருவருக்கு அறிமுகமான பனூ இஸ்ரவேலர்களைச் சேர்ந்த மூவர் கடுமையான வறுமையில் வாடிக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் வெண்குஷ்டத்திலும், இன்னொருவர் மொட்டையிலும், மூன்றாமவர் அந்தகராகவும் இருந்தனர். இம்மூவரையும் அல்லாஹ் சோதிக்க விரும்பினான்.

அதனால் அவர்களிடம் வானவர் ஒருவரை அனுப்பி அவர்களின் தேவைகளை எல்லாம் கேட்டறிந்து நிறைவேற்றினான். இதன்படி அம்மூவரும் தமது விருப்பப்படி பெரும் செல்வந்தர்களாக வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் அவ்வானவர்.,,,

வெண்குஷ்டம் பிடித்தவனிடம் வெண்குஷ்ட ரோகியின் தோற்றத்தில் காட்சியளித்து அல்லாஹ் அவனுக்கு வழங்கியுள்ள நிஃமத்துக்களை எல்லாம் சொல்லிக்காட்டி தமக்கு உதவுமாறு வேண்ட, அவனோ இவைகளெல்லாம் தனக்கு பரம்பரை பரம்பரையாக வந்து சேர்ந்ததாகக்கூறி தனது ஆரம்ப நிலையைப் பொய்யாக்கிப் பேச அவன் மீண்டும் அதே நிலைக்கு உள்ளாக்கப்பட்டான்.

பின்னர் மொட்டையனிடம் மொட்டையனாகத் தோற்றமளித்த போது அவனும் வெண்குஷ்டனைப் போலவே பேசலானான். இதனால் இவனும் பழைய நிலைக்கே தள்ளப்பட்டான்.

அதன்பின் அந்தகனிடம் அந்தகனைப் போல் தோன்றி உதவிகோர அவரோ தனது ஆரம்ப நிலையை எடுத்துக் கூறி உமக்கு விருப்பமானதை எடுத்துச் செல்லுமென்று கூறினார். அப்போது அவர் தாம் வானவர் என்பதைக்கூறி அவருக்காக பிரார்த்தனையும் செய்துவிட்டுச் சென்றார் என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நவின்றனர்."
*(நூல்: முஸ்லிம் ஷரீப் கிதாபுஸ் ஸுஹ்தி வர்ரகாயிக். இக்மால் பாகம்-8, பக்கம்-515.)*

சகோதரர்களே! இதுவரை உதாரணத்திற்காக வேண்டி ஒரு சில நபிமொழிகளை உங்களின் பார்வைக்குத் தந்தோம். ஆனால் இதுபோன்ற எத்தனையோ தகவல்கள் நபிமொழிகளில் மட்டுமல்ல. குர்ஆனிலும் உள்ளன. உதாரணமாக.,,,

ஹழ்ரத் மர்யம் அலைஹஸ்ஸலாமிடம் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் மனிதத் தோற்றத்தில் காட்சி தந்தது. அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் திஹ்யத்துல் கல்பி என்னும் நபித்தோழரின் உருவில் ஜிப்ரீலைப் பார்த்தது. நபித்தோழர்கள் ஜிப்ரீலை ஒரு பிரயாணியின் தோற்றத்தில் பார்த்த சம்பவங்களை எல்லாம் சொல்லலாம்.



இருப்பினும் வானவர்கள் எனப்படுவோர் ஒளியால் படைக்கப்பட்டவர்கள் என்பதுதான் இஸ்லாமியக் கொள்கையும் நமது நம்பிக்கையுமாகும். ஆனால் அந்த வானவர்கள் மனிதத் தோற்றத்தில் காட்சியளித்துள்ளனர். ஆம். ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களின் புதல்வர்கள் முன் மனித உருவில் வானவர்கள் கூட்டமாக வந்து காட்சி தந்தது மட்டுமின்றி நபியவர்களை குளிப்பாட்டி கபனிட்டு கப்ரைத் தோண்டி ஜனாஸா தொழுகையும் நடத்திய பின் அவர்களைக் கப்ரில் வைத்து அதன்மீது மண்ணைப் போட்டபின் இதுதான் உங்களுக்குரிய வழிமுறை என்பதாகவும் கற்றுக் கொடுத்துவிட்டும் சென்றார்கள் எனில், அதாவது ஒரு மனிதனுக்குள் நிகழக்கூடிய ஆட்டம் அசைவு போன்றவை அனைத்தையும் காட்டிவிட்டுச் சென்றார்கள் எனில் இதற்குப் பிறகும் அவர்கள் வானவர்களாகத் தான் இருந்தார்கள் என்பதை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

இதுபோன்றே ஹழ்ரத் லூத் அலைஹிஸ்ஸலாமவர்களிடம் வருகைதந்த வானவர்கள் ஒரு அழகான வாலிபர்களின் தோற்றத்தில் காட்சி தந்தனர். இவ்வாறே மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களிடம் வருகைதந்த இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாமவர்களை நபியவர்கள் கன்னத்தில் அறைந்துள்ளார்கள். அதன் விளைவு! அடித்த வேகத்தில் கண்ணையே இழந்திருக்கிறார்கள். இத்தனைக்குப் பிறகும் அவர்கள் ஒளியால் படைக்கப்பட்டவர்கள். நாம் நம்புகிறோம்.

பின்னும் ஒளியால் படைக்கப்பட்ட அந்த வானவர்கள் ஒருவேளை நபிமார்களுக்குத் தான் இப்படி மனித உருவில் காட்சி தந்தார்களோ என்று நீங்கள் யோசித்தால் அதற்கு இல்லையென்பது தான் பதிலாகும். ஏனெனில் நண்பனைச் சந்திக்கச்சென்ற ஒருவரிடம் வானவர் மனித உருவில் தோற்றம் வழங்கியதோடு அவருடன் உரையாடியுமிருக்கிறார். இதுபோன்றே வெண்குஷ்டம் பிடித்தவனைப் போலவும், மொட்டையனைப் போலவும், அந்தகனைப் போலவும் எல்லாம் காட்சியளித்துள்ளனர்.

இன்னும் சொல்லப் போனால் ஹாரூத் மாரூத் என்னும் இரு வானவர்கள் மனித உருவில் காட்சியளித்தது மட்டுமின்றி மனிதனுக்குரிய இயல்பான எல்லா தன்மை

களையும் அவர்கள் வெளிப்படுத்தி உள்ளனர்.

எனவே ஒளியால் படைக்கப்பட்டுள்ள வானவர்கள் மனிதஉருவில் மனிதர்களாகக் காட்சியளித்தது மட்டுமின்றி மனிதர்களது எல்லாநிலைகளையும் தமக்குள் கொண்டிருந் தமைக்கு இன்னும் வேறென்ன ஆதாரம் வேண்டும்? நூரா னிய்யத்துடைய நிலை கொண்ட வானவர்கள் மனிதர்களாகக் காட்சியளித்தார்கள். மனிதர்களோடு பேசினார்கள். மனிதர் களைப் போலவே நடந்தார்கள். மனிதர்கள் செய்யும் வேலைகளையும் செய்தார்கள் என்றால், இதில் எவ்வித ஆச் சரியமும் இல்லையென்றால் அல்லாஹ்வால் முதன் முதலா கப் படைக்கப்பட்ட ஜோதியாகிய முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மட்டும் மனிதராகக் காட்சி யளித்தால் இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

பின்னும் ஒளியால் சிருஷ்டிக்கப்பட்ட அந்த வானவர் கள் மனிதர்களாகக் காட்சியளித்தாலும் மனிதர்கள் செய் யும் வேலைகளைச் செய்தாலும் அந்த நிலையிலும் கூட அவர்களது நூரானிய்யத்துடைய நிலைக்கு எந்தவொரு பாதகமும் ஏற்படாததைப் போல, அதேநேரம் மற்ற மனிதர் களுக்குச் சமமாகாததைப் போல ஜோதி மயமான முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும் ஒரு மனித ராகப் பிறந்த போதிலும் அவர்களது ஜோதிக்கு அதனால் எவ்விதப் பாதகமும் நேரவில்லை என்பதோடு அவர்களை உன்னைப் போன்றவரென்று எப்படி நீ வாதம் செய்கிறாய்?

எனவே இதுவரை நாம் முன்னிருத்திய ஆதாரங்களைக் கொண்டு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் தான் அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப் பட்ட ஜோதி என்பதும், அந்த ஜோதிதான் ரபீவுல் அவ்வல் மாதத்தின் 12ம் நாள் மனித கோலம் கொண்டு வெளியா னது என்பதும், அதேபோல அந்த ஜோதி மனிதராகவும் முடியும் என்பதும் உறுதிப் படுத்தப்பட்டு விட்டது. இருப் பினும் இன்னுமொரு சந்தேகம். அதாவது.,,,

வானவர்கள் நூரானிய்யத்துடையவர்களாக இருந்து அவர்கள் மனிதத் தோற்றத்தில் காட்சி தந்ததை காஸிம் நபி



ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களோடு ஒப்பு நோக்குதல் சரியல்ல. ஏனெனில் அவர்கள் நபியவர்களைப் போன்று ஒரு தாயின் வழியாகவா பிறந்து வந்தார்கள்? ஆனால் நபியவர்கள் ஒரு தாய் வழியாகவல்லவா பிறந்து வந்தார்கள். இதற்குரிய ஆதாரத்தையும் கொஞ்சம் காட்டி விடுங்களேன் என்று கேட்பீர்களாயின் அதற்குரிய ஆதார மாவது,....

நீங்களும் நானும் ஏற்றுக் கொண்டுள்ள "அல்லாஹ் தான் விரும்பியதை எல்லாம் செய்யக் கூடியவன்" என்பதில் உங்களுக்கு சந்தேகம் ஏதேனுமுண்டா? இல்லையெனில், கலீலுல்லாஹ்வும் கலீமுல்லாஹ்வும், ரூஹுல்லாஹ்வும் ஒரு தாயுடைய வயிற்றிலிருந்து தான் பிறந்து வந்தார்கள் என்பதிலாவது ஏதேனும் சந்தேகமுண்டா? இல்லையெனில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் தோற்றத்தில் மட்டும் எப்படி சந்தேகம் வரலாம். வரக் கூடாது. இப்படிப்பட்ட சந்தேகங்களை எல்லாம் உங்க ளுடைய உள்ளத்திலிருந்து முழுவதுமாகக் கிள்ளி எறிந்து விடுங்கள். இல்லையேல் இதுவரை நாம் கூறிவந்தவைகளில் சொன்னதைப் போல அல்லாஹ்வின் வல்லமையின் மீதே நாம் சந்தேகம் கொள்ளக்கூடிய ஒரு அபாயகரமான சூழ் நிலை உருவாகி விடும். அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பா னாக. இருப்பினும் உங்களின் தெளிவுக்காக இன்னும் சில ஆதாரங்களை உங்களின் பார்வைக்கு தருகிறோம். தெளிவு பெறுவதற்கு அல்லாஹ்வே போதுமானவன்.

## சந்தேகம் வேண்டாம்

ஜோதி மயமான ஜெகமே போற்றும் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், தான் ஒரு தாயின் வழியாக வந்துதித்து இவ்வுலகில் மனித உருவில் நடமாடினர். இது அல்லாஹ்வுக்கு சாத்தியமான ஒன்றுதான் என்பதை நிரூ பித்துக் காட்டும் ஆதாரங்களாவது,...

وإن لكم فى الانعام لعبرة نسقيكم مما في بطونه من بين
فرث ودم لبنا خالصا سائغا للشاربين

"நிச்சயமாக உங்களுக்கு (ஆடு, மாடு, ஒட்டகங்

**கள் போன்ற) கால்நடைகளிலும் கூட தகுந்த படிப் பினைகள் உள்ளது. அவைகளின் வயிற்றிலுள்ள சானத்திற்கும் இரத்தத்திற்கும் இடையிலிருந்து கலப் பற்ற பாலை அருந்துவோருக்கு இனிமையானதாக (தாராளமாகப்) புகட்டுகிறோம்."**

*(சூரா அந்நஹ்ல் வசனம்-66.)*

وأوحى ربك الى النحل أن اتخذي من الجبال بيوتا ومن الشجر ومما يعرشون ثم كلي من كل الثمرات فاسلكي سبل ربك ذللا يخرج من بطونها شراب مختلف الوانه فيه شفاء للناس إن في ذالك لآية لقوم يتفكرون

**"மலைகளிலும் மரங்களிலும் உயர்ந்த கட்டிடங் களிலும் கூடுகளை அமைத்துக் கொள்ளும்படியாக வும் பின்பு எல்லாவிதமான கனிகளின் மலர்களிலிருந் தும் உணவருந்தி இறைவனின் வழியில் செல்லும்படி யாகவும் உமதிறைவன் தேனீக்களுக்கு வஹீ அறிவித் தான். அதன் வயிற்றிலிருந்து பலவித நிறங்களைக் கொண்ட ஒரு பானம் (தேன்) வெளியாகிறது. அதில் மனிதர்களுக்கு (பிணியகற்ற வல்ல) சிகிச்சை உண்டு. நிச்சயமாக இதிலும் சிந்தித்துணரும் மக்களுக்கு ஓர் அத்தாட்சி இருக்கிறது."** *(சூரா அந்நஹ்ல் வசனம்-68, 69.)*

மேற்கண்ட வசனங்களைக் கொண்டு சானத்திற்கும் இரத்தத்திற்கும் இடையிலிருந்து கலப்பில்லாத பாலை நம் மால் அருந்த முடிகிறது. அதேபோல ஒரு வகை பூச்சியின் வயிற்றிலிருந்து வெளியாகும் தேனை பருகவும் மருந்தாகப் பயன்படுத்திக் கொள்ளவும் முடிகிறது. இவைகளை எல் லாம் நமது அறிவு ஏற்றுக்கொள்ள முடியுமாயின் எல்லாம் வல்ல அல்லாஹ்வைக் கொண்டு எதையும் எப்படியும் உருவாக்க முடியும் என்பதை நம்புகின்றவர்களில் ஒருவராக நாம் இருந்தால் அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹா வின் வழியாக நபியவர்களின் ஜோதி மனித உருக்கொண்டு வெளிப்பட்டதை மட்டும் ஏன் நம்ப முடியாது?

மேலும் ரூஹுல்லாஹ்வாகிய ஹழ்ரத் ஈஸா அலை



ஹிஸ்ஸலாமவர்களை அல்லாஹ்வின் தூதராகவும் அடியா ராகவும் தந்தையின்றி வெறுமனே தாயாகிய மர்யம் அலை ஹஸ்ஸலாமவர்கள் வழியாகப் பிறந்தார்கள் என்பதை ஏற்றுக்கொண்ட நாம், கலீலுல்லாஹ்வாகிய இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களை அல்லாஹ்வின் அடியாராக வும் ரஸூலாகவும் விசுவாசம் கொண்ட நாம், கலீமுல்லாஹ் வாகிய மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களை அந்த பரம்பொரு ளின் அடியாரென்றும் ரஸூலென்றும் நம்பிக்கைக் கொண்ட நாம், இதற்குள் ஒளிந்து கொண்டுள்ள ரகசியத்தைப் புரிந்து கொண்ட நாம் அல்லாஹ்வின் முதல் படைப்பான ஜோதி தான் அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹாவின் மூலமாக இப்பூமியில் மனிதத் தோற்றம் கொண்டு உதய மாயிற்று என்பதை மட்டும் நம்மால் ஈமான் கொள்ளவோ புரிந்துகொள்ளவோ முடியவில்லையா? மற்ற நபிமார்களின் பிறப்பிலெல்லாம் மறைந்திருந்த அந்த ரகசியத்தை உடைத் துப் பார்க்க முடிந்த நம்மால் நமது இதய வேந்தரின் இனிய நாதரின் பிறப்புக்குள் மறைந்துள்ள ரகசியத்தை மட்டும் நம்மால் உடைத்துப் பார்க்க முடியவில்லை. இந்த நிலையில் அந்த உத்தம நபியைச் சிலர் தமக்குச் சமமாக்கி தன்னைப் போன்றவர் என்று எப்படிக் கூறுகின்றனர்? இதுதான் அறியாமையின் விபரீதமோ!

பின்னும் மறைவானவற்றின் மீது நம்பிக்கைக் கொள் வதற்குப் பெயர்தான் நம்பிக்கையாகும். இதில் மனிதக் கண் களுக்கோ அறிவுக்கோ உணர்வுகளுக்கோ எண்ணங் களுக்கோ ஒரு விஷயம் புரிந்து கொள்ளப்படுமாயின் அதற் குப் பெயர் நம்பிக்கையல்ல. இந்நிலையில் நாம் நம்பிக்கைக் கொண்டுள்ள இறைவனது வல்லமைக்கும் ஆற்றலுக்கும் சான்றாகக் காட்டப்படும் இதுபோன்ற விஷயங்களை நம்பு வதுதான் உண்மையில் இறைவன் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கைக்குரிய ஆதாரமாகும். ஆதலால் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதிதான் முதன் முதலாக அல்லாஹ்வால் படைக்கப்பட்டது என்பது இப்போது ஊர்ஜிதமாயிற்று. அந்த ஜோதிதான் ரபீவுல் அவ்வலின் 12ம் நாள் இப்பூமியில் உதயமாயிற்று என்பதும் ஊர்ஜிதமாயிற்று. ஜோதி மயமான ஒருவர் மனித உருவில் காட்சியளிக்க முடியும் என்பதற்கும் பதில் கிடைத்தது. அத் துடன் அந்த ஜோதி மயமானவர் ஒரு தாயின் வழியாகப்

பிறக்க முடியுமென்பதும் அசைக்க முடியாத ஆணித்தரமான ஆதாரங்களுடன் ஊர்ஜிதமாயிற்று.

அத்துடன் அண்ணல் நபியவர்கள் தமது தந்தை அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் முதுகந்தண்டில் நுத்பாவாக இருக்கும்போதும், தான் ஒரு தோதி தான் என்பதை ஊர்ஜிதப்படுத்தினர். அதன்பின் தாயின் கர்ப்பறைக்கு வந்து சேர்ந்த போதும், தான் ஒரு ஜோதி தான் என்பதை ஊர்ஜிதப்படுத்தினர். இதேபோல தாம் உதயமான தினத்தன்றும் தான் ஒரு ஜோதி தானென்பதை நிரூபித்துக் காட்டிய பின்னரே உதயமானார்கள். இந்நிலையில் அப்புனித நபியவர்களின் தோழமையைப் பெற்றவர்கள் தமது ரஸூலை எப்படியெல்லாம் பெற்றுக் கொண்டிருந்தார்கள் என்பதை அடுத்து வரும் பக்கங்களில் பார்ப்போம்.

ஆம். வல்லோனாகிய அல்லாஹ்வைக் கொண்டு பொருந்திக் கொள்ளப்பட்டோரென திருக்குர்ஆனைக் கொண்டு உத்திரவாதம் அளிக்கப்பட்ட ஸஹாபாக்கள் என்னும் அத்தோழர்கள் தமது ரஸூலை ஒரு மனிதராகக் கண்டாலும் கூட அவர்களில் யாருமே தமது ரஸூலுக்குச் சமமாக முடியாது என்னும் ஓர் நிரந்தரமானக் கொள்கையை தமக்குள் அவர்கள் கொண்டிருந்ததற்கு அவர்களின் செயல்பாடுகளே தகுந்த சான்றாகும் என்பதை நம்மால் ஒருபோதும் மறுக்க முடியாது. இதற்கு உதாரணம் சொல்ல வேண்டுமாயின்,...

அவர்கள் தமது நபியின் உதிரத்தைக் குடித்ததையும், ஊரியத்தைக் குடித்ததையும், அவர்களது வியர்வையை திரவியமாக உபயோகித்ததையும், சளியையும் உமிழ் நீரையும் தமது முகங்களில் பூசிக் கொண்டதையும் உதாரணமாகச் சொல்லலாம். இருப்பினும் இங்கே நாம் சொல்லவந்த விஷயம் நூர் சம்பந்தப்பட்டதாகுமாதலால் அதைக் குறித்துப் பேசுகிறோம்.

*இஸ்லாமியர்களே!*

என்னுடைய ஷைகு நாயகம் அவர்களின் சகவாசத்தாலும் அவர்களது நல்லாசியாலுமே என்னால் இப்படியெல்லாம் உதவ முடிகிறதென்றால் எனது ஷைகு நாயகம்



எப்படிப்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதை உங்களால் ஓரளவுக்கு ஊகித்துக்கொள்ள முடிகிறதல்லவா. இதேபோல கண்மணி நாயகமவர்களின் சகவாசத்தைப் பெற்றிருந்த அத்தோழர் பெருமக்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களைப் பார்க்கப் போகும் உங்களில் சுத்தமான உள்ளமுடையோராக இருப்போர் கண்டிப்பாக புரிந்து கொள்ள முடியும். அதாவது,...

قال حماد بن سلمة أخبرنا ثابت عن أنس رضى الله عنه قال: كان أسيد بن حضير وعباد بن بشـــر عند النبي صلى الله عليه وآله وســـلم في ليلة ظلماء حـــندس: فلما خرجا أضائت عصا أحدهما فمشيا في ضوئها فلما افترقـــت بهما الطريق أضائت عصا الآخر

**“ஹழ்ரத் உஸைத் பின் ஹுழைர் மற்றும் ஹழ்ரத் உப்பாத் பின் பிஷ்ர் ரலியல்லாஹு அன்ஹுமா ஆகிய இருவரும் “மாதக் கடைசியிலுள்ள மூன்று இரவுகளில்” ஒரு நாளிரவு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களோடு நீண்ட நேரம் உரையாடிய பின் அங்கிருந்து வீடு திரும்பும் போது இரவாதலால் ஒரே காரிருளாக இருந்தது. அப்போது அவ்விருவரிடமும் இருந்த கைத்தடிகளில் ஒன்று பிரகாசிக்கலாயிற்று. அதன் வெளிச்சத்தில் இருவரும் சென்று கொண்டிருக்கும் போது இருவரும் வெவ்வேறு பாதையில் செல்ல நேரிட இரண்டாமவரின் கைத்தடியும் பிரகாசிக்கலாயிற்று.”**

இந்த ஹதீதை ஹழ்ரத் அனஸ் பின் மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹழ்ரத் ஸாபித் ரலியல்லாஹு அன்ஹுவுக்குச் சொன்னதாக ஹழ்ரத் மஃமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றனர். அடுத்து ஹம்மாத் என்பாரைக் கொண்டு அறிவிக்கப்பட்ட ஹதீதைப் பாருங்கள்.

وقال معمر ابن راشـــد عن ثابـــت عن أنس رضى الله عنهما أن اسيد بن حضير ورجلا من الأنصار تحدثا عند

رسول الله صلى الله عليه وآله وسلم حتى ذهب من الليل ساعة في ليلة شديدة الظلمة ثم خرجا وبيد كل واحد منهما عصية فأضائت عصا أحدهما حتى مشيا في ضوئها حتى إذا إفترقت بهما الطريق أضائت عصاالآخر فمشيا كل واحد منهما في ضوء عصاه حتى بلغ اهله

**“ஹழ்ரத் உஸைத் பின் ஹுழைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் ஹழ்ரத் உப்பாத் பின் பிஷ்ர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் கடுமையான இருள் காலத்தின் இரவுகளில் ஓரிரவு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடன் நீண்ட நேரம்வரை உரையாடிக் கொண்டிருந்து விட்டு பின்னர் அங்கிருந்து விடைபெறும் போது அவ்விருவரின் கரங்களிலிருந்த தடிகளில் ஒருவரின் தடி பிரகாசிக்க, அப்பிரகாசத்தில் இருவரும் வெவ்வேறு பாதை வரும்வரை சென்று கொண்டிருந்தனர். பின்னர் தேவைக்கேற்ப இரண்டாமவரது தடியும்அவரவர் இல்லம் வரை பிரகாசித்தது.”**

இவ்விரு ஹதீதுகளும் உம்தத்துல் காரி என்னும் நூலின் பாகம்-16, பக்கம்-270. பத்ஹுல் பாரி பாகம்-7, பக்கம்-156. இர்ஷாதுஸ் ஸாரி பாகம்-8, பக்கம்-317ல் கிதாபு மனாகிபில் அன்ஸாரி, பாபு மன்கபத்தி உஸைத் பின் ஹுழைர் வ உப்பாத் பின் பிஷ்ர் என்னும் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இன்னும் இதே நூல்களில் பின்வரும் ஹதீதுகளும் பதிவு செய்யப்பட்டிருப்பதையும் பார்க்கலாம். அதாவது,...

عن قتادة بن نعمان أنه خرج من عند النبي صلى الله عليه وآله وسلم وبيده عرجون فأضاء العرجون

**“ஹழ்ரத் கதாதா பின் நுஃமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் புனிதமிகு சமூகத்திலிருந்து வீட்டை நோக்கிச் செல்லும்போது அவ்விரவு**



**ஒரே காரிருளாக இருந்ததால் அவரது கரத்திலிருந்த தடி பிரகாசிக்க ஆரம்பித்தது.** இந்த ஹதீத் இப்னு அஸாகிரில் குறிப்பிடப்பட்டுள்ளதாக உம்தத்துல் காரி என்னும் நூலின் பாகம்-4, பக்கம்-242ல் பாபு இத்காலில் பயீரி பில் மஸ்ஜிதில் இல்லத்தி என்னும் பிரிவில் பதிவாகியுள்ளது. இதுபோல இன்னும் பல ஹதீதுகளும் இப்பகுதியில் பதிவு செய்யப்பட்டிருப்பதைக் காணலாம்.

எனவே மேற்கண்ட ஹதீதுகளைக் கொண்டு நமக்குக் கிடைக்கும் படிப்பினை, பிரயோஜனம் என்னவென்பதைப் பார்க்கும்போது அல்லாஹ்வின் நல்லடியார்களுக்கு அல்லாஹ் “கராமத்” என்னும் அற்புதங்களை வழங்கியுள்ளான் என்பது உறுதிப்படுத்தப்பட்டாலும் அந்நபித் தோழர்கள் நபியவர்களின் சமூகத்திலிருந்து விடைபெற்று காரிருள் சூழ்ந்த இரவு நேரங்களில் செல்லும்போது அவர்களது கைகளிலிருந்த ஜடப் பொருட்களான தடிகள்கூட பிரகாசித்திருக்கின்றன என்றால், பின்னும் அவை கண்டிப்பாக காத்த முன் நபியவர்களின் அருள் கிருபையைக் கொண்டுதான் பிரகாசித்ததெனில் நிச்சயமாக நபியவர்கள் ஜோதிமயமானவர்களாகத்தான் இருந்தார்கள் என்பது திண்ணமாகத் தெரிகிறது.

இதேபோல அல்லாஹ்வின் நேசர் பெருமக்களான வலிமார்களின் வதனங்கள் நூரானிய்யத்தான பிரகாசமுடையதாக இருப்பதுகூட நபியவர்கள் ஜோதி மயமாக ஜொலித்துக் கொண்டிருந்ததற்குரிய அத்தாட்சியேயாகும்.

பின்னும் ஒளியுள்ள மின் விளக்கில் ரேடியத்தின் துண்டொன்றை பலமணி நேரம் வைத்துவிட்டு அதன்பின் அதை கடும் இருள் சூழ்ந்த இருட்டில் வைத்துப் பார்ப்பீர்களாயின் நிச்சயமாக அதுவும் ஒளியுள்ள ஓர் பொருளைப் போல் தெரிகிறதா இல்லையா என்பதைப் பரிசோதித்துப் பாருங்கள்.

இவ்வாறே இறுதிநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடன் சகவாசம் கொண்டிருந்த தோழர்களின் கரங்களிலிருந்த அந்த ஜடப்பொருட்களும் பிரகாசித்தன எனில் அது முன்பே பிரகாசமானதொரு பொருளோடு இணைந்திருந்தது என்பதற்குரிய அழுத்தமான

ஆதாரம் கிடைக்கிறதல்லவா. இப்படியெல்லாம் முஃமின்களால் விளக்கம் தரப்படுவதைக் கண்ட சில நயவஞ்சகர்கள்,...

"நபியவர்கள் ஜோதி மயமானவர்கள். அதனால்தான் அவர்களது தோழர்களின் கரங்களிலிருந்த தடிகளும் பிரகாசித்தன என்று கூறுகிறீர்களே! அப்படியானால் அத்தோழர்களை விட அந்தத் தடிகள் உயர்வானதா என்ன? இல்லையெனில் அந்த இருளில் அவர்கள் ஏன் பிரகாசிக்கவில்லை? ஒருவேளை அவர்கள் முழுவதுமாகப் பிரகாசிக்க முடியவில்லை என்றாலும் குறைந்த பட்சம் அவர்களின் உறுப்புக்களில் ஏதாவதொன்று பிரகாசித்திருக்கலாமே? என்று கேட்கின்றனர்.

ஆம். அந்த ஜடப் பொருளுக்குப் பகரமாக நபித்தோழர்களது அங்கங்கள் ஏன் பிரகாசிக்கவில்லை என்றொரு கேள்வி எழும் என்பதாலோ என்னவோ அதற்கான ஹதீத் சொல்லப்பட்ட ஹதீதுடன் விளக்கப்படாமல் விடுபட்டிருக்குமோ என்றொரு எண்ணம் உள்ளத்தில் ஊசலாடுகிறது. எதற்கும் உம்தத்துல் காரி என்னும் நூலின் பாகம்-4, பக்கம்-242டை பார்க்க வேண்டுகிறோம்.

மேலும் நபித்தோழர்களை விட அந்த ஜடப்பொருட்களை உயர்த்திப் பேசுவதாகவும், நபித் தோழர்களுக்கு அவ்விருள் ஏன் அகலவில்லை என்றும் வாதிக்கின்ற இவர்களிடம் நாம் கேட்க விரும்புவதெல்லாம்,...

இவர்களுக்கு இருள் என்றாலே வானத்தின் இருள் மட்டும் தானென்று நினைக்கிறார்களா? ழலாலத், குப்ரு, ஷிர்க் போன்றவைகளெல்லாம் இருளில்லையா? ஒரு ஜடப்பொருளாகிய தடி என்பது இன்னொரு ஜடப்பொருளான வானத்தின் இருளைத்தான் அகற்ற முடியும். இதற்காகவா நபியவர்கள் தமது தோழர்களை உருவாக்கினார்கள்? நிச்சயமாக இல்லையென்று தான் சொல்லுவோம். பின் எதற்காக என்றால் வழிகேடு, அறியாமை, குப்ரு, ஷிர்க் போன்றவைகளெல்லாம் நீக்கப்பட்டு தௌஹீதென்னும் ஏகத்துவத்தின் ஒளியை உலகமெங்கும் பிரகாசிக்கச் செய்வதற்காகத்தான் உருவாக்கப்பட்டார்கள். இதைத்தான் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்,...



أصحابي كالنجوم فبأيهم إقتديتم إهتديتم

**"எனது தோழர்களில் யாரைப் பின்பற்றினாலும் நேர்வழியை அடைவீர்கள்"** என்று சொன்னார்கள்.

இன்னும் இருள் என்றால் என்ன? அதன் வகைகள் என்ன? என்பதைக்கூட சரியாகப் புரிந்துகொள்ள முடியாத இவர்கள் நமக்குப் பூச்சாண்டி காட்டுகின்றனர். இதற்குமுன் இவர்கள் ஒளியைப் பார்த்திருந்தாலல்லவா இருளைப் பற்றித் தெரிய முடியும். எனவே மேற்கண்ட ஹதீதுகளைக் கொண்டும் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஜோதி மயமானவர்கள் என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும். இருப்பினும் புனிதமிகு நபித்தோழர் பெருமக்கள் இது விஷயத்தில் எப்படிப்பட்ட விளக்கங்களை எல்லாம் தந்துள்ளனர் என்பதையும் நாதாக்களின் நல்லாசியால் இப்போது பார்ப்போம்.

## ஜோதி மயமான திருவதனம்

حدثنا ابوبكر بن اسحاق أنبأ عبيد بن عبدالواحد ثنا يحى بن بكير ثنا الليث عن عقيل عن ابن شهاب عن عبد الرحمن بن كعب بن مالك قال: سمعت كعب بن مالك يقـــول: لما سلمت على رسول الله صلى الله عليه وآله وسلم قال وهو يبرك وجهه وكان رسول الله صلى الله عليه وآله وسلم إذا سرّ استنار وجهه كأنه قطعة قمر وكان يعرف ذالك منه

**"நான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு ஸலாம் சொன்னேன். அப்போது அவர்களது திருவதனம் ஒளியால் இலங்கிக் கொண்டிருந்தது. இன்னும் நபியவர்கள் மகிழ்வோடு இருப்பார்களாயின் அப்போது அவர்களின் திருவதனம் நிலவின் ஒரு பகுதிபோலத் தென்படும் என்று ஹழ்ரத் கஃப் இப்னு மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லக் கேட்டேன் என்பதாக ஹழ்ரத் அப்துர் ரஹ்மான் பின்**

**கஃப் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கின்றனர். இது நபியவர்களுக்கு மட்டுமே பிரத்யேகமானதாகும்."** *(நூல்: அல் முஸ்தத்ரக் பாகம்-2, பக்கம்-662. தலாயிலுன் நுபுவ்வத் இமாம் பைஹகீ பாகம்-1, பக்கம்-197. புகாரி ஷரீப் பாகம்-2, பக்கம்-731.)*

இன்னும் இந்த ஹதீத் முஸ்லிம் ஷரீப், *இக்மால் பாகம்-8, பக்கம்-274. முஸ்னத் அஹ்மத் பாகம்-5, பக்கம்-47, எண்-15882 பாபு ஹதீதீ தௌபத்தி கஃபிப்னி மாலிக்கின் வஸாஹிபைஹி என்னும் பிரிவில் நீண்டதொரு ஹதீதிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

وأخبرنا ابو عبد الحافظ قال: حدثنا ابوبكر: احمد بـــن سليمان الفقيه قال: حدثنا احمد بن محمد بن عيسى قـــال: حدثنا ابو نعيم قال: حدثنا زهير عن ابي اسحاق قال: سأل رجل البراء: اليس كان وجه رسول الله صلى الله عليه وآله وسلم مثل السيف؟ قال: لاكان مثل القمر

அடுத்து **"ஹழ்ரத் பராஃ ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருவதனம் வாளைப் போலிருக்க வில்லையா? என்றொருவர் கேட்க, அதற்கவர்கள்; இல்லை சந்திரனைப் போலிருந்தது என்று கூறினார் கள்."** *(நூல் : தலாயிலுன் நுபுவ்வத் இமாம் பைஹகீ பாகம்-1, பக்கம்-195. புகாரி ஷரீப் பாகம்-2, பக்கம்-729. திர்மிதி ஷரீப் பாகம்-5, பக்கம்-363.)*

ஸுப்ஹானல்லாஹ்! நமது நபியவர்களைக் கண்ணால் கண்ட அவர்தம் தோழர்களில் ஒருவர் நபிகளாரின் திருவதனத்தை சந்திரனின் ஒருபகுதி போலவும், இன்னொருவர் பார்வைக்கு சந்திரனைப் போலவே இருந்ததாகவும் சொல்கிறார். இப்போது இன்னொருவர் என்ன சொல்கிறாரென்பதையும் பாருங்கள்,...

أخبرنا أبوطاهر: محمد بن محمد بن محمش الفقـــيه قـــال:



أخبرنا ابو حامد: احمد بن محمد بن يحى بن بلال البزاز قـــال: حدثنا محمد بن اسماعيل الأحمش قـــال: حـــدثنا المحاربى عن أشعث عن ابى اسحاق عن جابر بن سمرة قـــال: رأيت النبي صلى الله عليه وآله وسلم في ليلة إضحيان وعليه حـــلة حمراء فجعلت أنظر اليه والى القمر فلهو كان في عيني أحسن من القمر

**"ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை மேகமில்லாத முழு நிலவுடைய இரவொன்றில் அவர்கள் மீது சிவப்பு நிறப் போர்வை இருக்கும் நிலையில் கண்டேன். அப்போது நான் சந்திரனை ஒரு முறையும் நபியவர்களின் திருவதனத்தை ஒரு முறையுமாகப் பார்ப்பவனாக இருந்தேன். அப்போது சந்திரனைவிட அவர்களின் திருவதனமே மிக மிக அழகானதாகக் காணப்பட்டது என்பதாக ஜாபிர் பின் ஸமுரா ரலியல்லாஹு அன்ஹு கூறுகின்றனர்."** *(நூல் : தலாயிலுன் நுபுவ்வத் இமாம் பைஹகீ பாகம்-1, பக்கம்-196. ஸுனன் திர்மிதி, கிதாபுல் அதப், பாகம்-4, பக்கம்-370. ஸுனன் தாரமீ பாகம்-1, பக்கம்-30)*

ஆக நபியவர்களின் திருவதனம் சந்திரனை விடவும் மிக அழகானதென்பது உறுதியாகிறது. ஆம். கண்டிப்பாக நபியவர்களின் திருவதனத்தை விட வேறொரு பொருள் அழகானதாகவோ, பிரகாசமானதாகவோ ஒருபோதும் இருக்கவே முடியாது. ஏனெனில் நபியவர்களின் ஜோதியிலிருந்து தான் சந்திரனும் படைக்கப்பட்டதென்பதை முன்னால் வாசித்தது உங்களுக்கு நினைவிலிருக்கலாம். இன்னும் நபியவர்கள் மனிதத் தோற்றத்தில் காணப்பட்டாலும் அவர்கள் முழுக்க முழுக்க ஜோதி மயமானவர்கள் தானென்பதற்கு அடுத்து வரும் நபியவர்களின் ஒரு முஃஜிஸாத் என்னும் அற்புதமும் அசைக்க முடியாத ஆதாரமாக விளங்குவதைக் காணலாம். அதாவது,...

حدثنا صدقة بن الفضل أخبرنا ابن عيينة عن ابـــن ابى نجيح عن مجاهد عن ابى معمر عن عبدالله بن مسعود رضي

الله عنه قال: إنشق القمر على عهد رسول الله صلى الله عليه وآله وسلم شقتين فقال رسول الله صلى الله عليه وآله وسلم إشهدوا

**“நாங்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களோடு அமர்ந்திருக்கும் போது சந்திரன் இரண்டாகப் பிளந்தது. உடனே நபியவர்கள், சந்திரன் பிளந்ததற்கு நீங்கள் சாட்சியாக இருங்களென்று சொன்னார்கள்.”** *(நூல் : புகாரி ஷரீப் கிதாபுல் மனாகிப் பாகம்-2, பக்கம்-762.)* இதுபோன்றே,

حدثني عبدالله بن محمد حدثنا يونس حدثنا شيبان عن قتادة عن أنس بن مالك رضي الله عنه وقال لي خليفة: حدثنا يزيد بن زريع حدثنا سعيد عن قتادة عن انس بن مالك رضي الله عنه أنه حدثهم أن أهل مكة سألوا رسول الله صلى الله عليه وآله وسلم أن يريهم آية فأراهم إنشقاق القمر

**“மக்காவாசிகள் மாநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் எங்களுக்கு ஏதேனும் அற்புதத்தைக் காட்டுங்களென்று கேட்க, நபியவர்கள் சந்திரனை பிளக்கவைத்துக் காட்டினார்கள் என்பதாக ஹழ்ரத் அனஸ் பின் மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றனர்.”** *(நூல் : புகாரி ஷரீப், கிதாபுல் மனாகிப், பாகம்-2, பக்கம்-762.)*

மேற்கண்ட இவ்விரு ஹதீதுகளைக் கொண்டு ஒரு விஷயத்தை நீங்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, ஒரு இரும்பை இன்னொரு இரும்பால் தான் துண்டாக்க முடியும் என்பதும், ஒரு கண்ணாடியை இன்னொரு கண்ணாடியால் தான் அறுக்க முடியும் என்பதும் நாம் தெரிந்து வைத்துள்ள விபரங்களாகும். அவ்வாறின்றி ஒரு கண்ணாடியை கல்லைக் கொண்டு அறுத்தால் அது பல துண்டுகளாக உடைந்து தான் போகுமேயன்றி அறுபடாது. அப்படி இல்லையேல் அக்கண்ணாடியின் இனத்தைச் சேர்ந்த



வைரம் போன்ற பொருளைப் பயன்படுத்தினால் அது அறுபடும். இதேபோல ஒளியாலான சந்திரனை பிளப்பதாயின் அதைவிடப் பிரகாசமானதொரு பொருளைக் கொண்டு தான் அது சாத்தியமாகும். இந்த இடத்தில் நபியவர்கள் தான் சந்திரனை விடப் பிரகாசமானவன் என்பதை அதை பிளப்பதன் மூலம் நிரூபித்துக் காட்டுகின்றனர். இதைவிட நபியவர்கள் தாம் ஒரு ஜோதி மயமாகத்தான் இருந்தார்கள் என்பதற்கு வேறென்ன ஆதாரம் வேண்டும்? இன்னும் நபியவர்கள் ஜோதி மயமானவர்கள் தானென்பது அவர்களது தோழர் பெருமக்களின் கொள்கையாக இருந்தது என்பதை ஆதாரப்படுத்துகின்ற விஷயங்களைப் பாருங்கள்,...

**“ரஸூலே அக்ரம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் உரையாடுவார்களேயானால் அவர்களது முன்னிரண்டு பற்களிலிருந்தும் நூரைப் போன்ற பிரகாசம் வெளிப்படுவது எனக்குத் தெரியும் என்பதாக ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு கூறுகின்றனர்.”** *(நூல் : ஷமாயில் திர்மிதி, பாபு மாஜாஅ ஃபீ காத்த மின் நுபுவ்வத்தி, ஹதீத் எண்-15. தலாயிலுன் நுபுவ்வத் இமாம் பைஹகீ பாகம்-1, பக்கம்-215. முஃஜிமுல் கபீர் பாகம்-11, பக்கம்-328. ஸுனன் தாரமீ பாகம்-1, பக்கம்-30.)*

சகோதரர்களே! உங்களது வாழ்க்கையில் நீங்களும் பெரும் பெரும் பேச்சாளர்களை எல்லாம் பார்த்திருப்பீர்கள். அவர்களில் பெரும்பாலோர் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை மிகவும் தரக்குறைவாக தம்மைப் போன்ற ஒரு சாதாரண மனிதரென்று ஒப்பிட்டுப் பேசுவதையும் கேட்டிருப்பீர்கள். இவர்கள் பேசும் போது இவர்களின் வாயிலிருந்து நூர் ஏதேனும் வெளியாவதைப் பார்த்திருக்கிறீர்களா? இல்லையெனில் இவர்களது வாயிலிருந்து நபிமார்கள், வலிமார்கள், இமாம்கள் போன்றோரை கீழ்த்தரமாக விமர்சிக்கப்படும் அசிங்கமான வார்த்தைகளும் கெட்டதொரு துர்நாற்றமும் தான் வெளியாவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இந்நிலையில் இவர்கள் நபியவர்களை தம்மோடு எப்படி ஒப்பு நோக்குகின்றனர்?

## வள்ளல் நபியின் வியர்வை நூர்

عن محمدبن اسماعيل البخارى ثنا عمرو بن محمد بن

جعفر ثنا ابو عبيدة معمر بن المثنى ثنا هشام بــن عروة عن ابيه عن عائشة رضي الله عنها قالت كنت قــاعدة أغزل والنبي صلى الله عليه وآله وسلم يخصف نعله فجعل جبينه يعرق وجعل عرقه يتولد نورا فهبت فقال: رسول الله صلى الله عليه وآله وسلم مالك بهت؟ قلت: جعل جبينك يعرق وجعل عرقك يتولد نورا

"அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா கூறுகின்றனர். நான் ஒருமுறை ஆடையொன்றை தைத்துக் கொண்டிருந்தேன். அப்போது அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது முபாரக்கான பாதணியை சரிசெய்து கொண்டிருந்தார்கள். அப்போது நபியவர்களின் நெற்றியிலிருந்து வியர்வைத் துளிகள் விழுந்து கொண்டிருந்தன. இன்னும் அதிலிருந்து பிரகாசம் வெளிப்படுவதை நான் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தேன். அதுபோது என்னைக் கண்ட நபியவர்கள், ஏன் இப்படிப் பார்க்கிறீர்? என்று கேட்க, அதற்கு நான்; இறைத்தூதரே! உங்களின் நெற்றியிலிருந்து வெளிப்படும் வியர்வை பிரகாசிக்கின்றது என்றேன்.

(நூல் : ஸுனனுல் குப்ரா இமாம் பைஹகீ, மிக்யாஸே நூர் பக்கம்-68. கஸாயிஸுல் குப்ரா பாகம்-1, பக்கம்-67.)

மேற்கண்ட ஹதீதில் நபியவர்களின் வியர்வையே ஒளிமயமாக இருந்ததெனில் அந்த நபியைத் தம்மைப் போன்ற ஒரு சாதாரண மனிதரென்று இழித்துரைப்போரின் வியர்வையிலிருந்து நூர் அல்ல. கரும் புகையை உள்ளடக்கிய நார் (நெருப்பு) தான் வெளிப்படும். இத்தனைக்குப் பிறகுமா இவர்கள் தமது இதய வேந்தரான இரஸூலை தம்மைப் போன்ற மனிதரென்று வாதிக்கின்றனர்.?

அடுத்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒரு மனிதத் தோற்றத்தில் காட்சியளித்த ஒளிப் பிழம்பு என்பதை மேலும் உறுதிப்படுத்த இதோ நாம் எடுத்துக் காட்டப்போகும் ஹதீத் மிக மிக அற்புதமான அதே நேரம் அழகானதோர் நபிமொழியாகும்.



## மனித உருக்கொண்ட ஜோதியே உங்களுக்கு எங்கள் ஸலாம்

حدثنا علي بن عبدالله حدثنا ابن مهدى عن سفيان عن سلمة عن كريب عن ابن عباس رضي الله عنهما قال: بت عند ميمونة رضي الله عنها فقــام النبي صلى الله عليه وآله وسلم فأتى حاجته فغسل وجهه ويديه......وكان يقول في دعائه اللهم إجعل في قلبي نورا وفي بــصري نورا وفي سمعي نورا وعن يميني نورا وعن يساري نورا وفوقــي نورا وتحتي نورا وأمامي نورا وخلفي نورا واجعل لي نورا

"ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு கூறுகின்றனர். நான் ஒருநாள் இரவு ஸய்யிதத்துனா மைமூனா ரலியல்லாஹு அன்ஹாவின் இல்லத்தில் தங்கியிருந்தேன். அப்போது தூக்கத்திலிருந்து கண் விழித்த நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது தேவைகளை எல்லாம் முடித்தபின் தமது வதனத்தையும் கைகளையும் கழுவினார்கள். இதன் பின் அவர்கள் தமது பிரார்த்தனையில், யா அல்லாஹ்! எனது உள்ளத்தை ஒளியாக்கு. எனது பார்வையை ஒளியாக்கு. எனது கேள்வியை ஒளியாக்கு. எனது வலப்புறத்தையும் ஒளியாக்கு. எனது இடப்புறத்தையும் ஒளியாக்கு. எனது மேல் பகுதியையும் கீழ் பகுதியையும் ஏன்! என்னையே ஒளியாக்கு எனப் பிரார்த்

**தித்தவர்களாக இருந்தனர்."** *(நூல் : புகாரி ஷரீப், கிதாபுத் தஃஅவாத், பாபு துஆயி இதன் தபஹ பில்லைலி பாகம்-4, பக்கம்-248.)*

حدثنا عبدالله بن هشام بن حيان العبدي حدثنا عبد الرحمن يعنى ابن مهدى حدثنا سفيان سلمة بن كهيل عن كريب عن ابن عباس رضي الله عنهما قال: بت عند بيت ميمونة رضي الله عنها فقام النبي صلى الله عليه وآله وسلم..... وكان في دعائه اللهم إجعل في قلبي نورا وفي بصري نورا وفي سمعي نورا وعن يميني نورا وعن يساري نورا وفوقي نورا وتحتي نورا وأمامي نورا وخلفي نورا وعظم لي نورا

**"அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது பிரார்த்தனையில் யா அல்லாஹ்! எனது உள்ளத்தை ஒளிமயமாக்குவாயாக. இன்னும் எனது பார்வையையும், கேள்வியையும், எனது வலப் பகுதியையும் இடப் பகுதியையும் மேல் பகுதியையும் கீழ் பகுதியையும், முற்பகுதியையும், பிற்பகுதியையும் பின்னும் என்னை அதிக ஒளியுள்ளவனாகவும் ஆக்குவாயாக என்று கேட்பவர்களாக இருந்தார்கள் என்பதாக இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றனர்."** *(நூல் : முஸ்லிம் ஷரீப், கிதாப் ஸலாத்தில் முஸாபிரீன், பாபுத் துஆயி ஃபீ ஸலாத்தில் லைலி வ கியாமிஹி. இக்மால் பகாம்-3, பக்கம்-117.)*

حدثنا محمد بن عيسى حدثنا هشيم أخبرنا حصين عن حبيب بن ابى ثابت وحدثنا عثمان بن ابى شيبة حدثنا محمد بن فضيل عن حصين عن حبيب بن ثابت عن محمد بن علي بن عبدالله بن عباس عن ابيه عن ابن عباس أنه رقد عند النبي صلى الله عليه وآله وسلم فرآه استيقظ فتوسك



وتوضأ وهو يقول:..... اللهم إجعل في قلبي نورا وإجعل في لساني نورا وإجعل في سمعي نورا وإجعل في بصري نورا وإجعل خلفي نورا وأمامي نورا وإجعل من فوقي نورا ومن تحتي نورا اللهم وأعظم لي نورا

**"நான் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் இல்லத்தில் ஓரிரவு தங்கியிருந்தேன். அப்போது கண்விழித்த நபியவர்கள், மிஸ்வாக் செய்து ஒழுச் செய்தபின்; யா அல்லாஹ்! எனது உள்ளத்தையும் எனது நாவையும், இன்னும் எனது பார்வையையும் கேள்வியையும், இன்னும் எனது பிற்பகுதியையும் முற்பகுதியையும் மேற்பகுதியையும் கீழ் பகுதியையும் இன்னும் என்னை அதிகமான பிரகாசமுள்ளவனாக ஆக்குவாயாக என்று பிரார்த்தித்தார்கள் என்பதாக ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினர்."** *(நூல் : ஸுனன் அபீதாவூத், கிதாபுஸ் ஸலாத்தி, பாபு ஃபீ ஸலாத்தில் லைலி பாகம்-2, பக்கம்-93.)*

*இன்னும் இந்த ஹதீத் ஸுனன் அந்நஸாயி, கிதாபுத் தக்பீர், பாபு துஆயி ஃபிஸ்ஸுஜூதி பாகம்-2, பக்கம்-567. முஸ்னத் அஹ்மத் பின் ஹன்பல் பாகம்-1, பக்கம்-733. அதபுல் முப்ரத், பாபு தஅவாத்தின் நபி, எண்-717 போன்றவைகளிலும் மிக நீண்டதோர் ஹதீதின் ஒரு பகுதியாகும். எனது ரத்தம் சதை தோல் முடி போன்ற வாக்கியங்கள் புகாரி ஷரீபில் காணப்படும் வாக்கியங்களாகும். புகாரி பா-4, ப-249.)*

மேலும் எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களே அல்லாஹ்வைக் கொண்டு முதன் முதல் படைக்கப்பட்ட ஜோதி என்பதற்கும் ஜோதியாகவே மனிதத் தோற்றத்தில் காட்சியளித்தார்கள் என்பதற்கும் இதுவரை ஆதாரப்படுத்தப்பட்டவைகளில் புகாரி முஸ்லிம் போன்ற நூல்களிலிருந்து ஆதாரம் காட்டப்படவில்லை என்னும் ஆதங்கமும் இப்போது மேலே எடுத்துக் காட்டப்பட்டவைகளைக் கொண்டு நீங்கியிருக்குமென்று நம்புகிறோம். புகாரி முஸ்லிம் மட்டுமின்றி இன்னும் பல கிரந்தங்

களில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்நபிமொழிகள் நபியவர்கள் ஒரு மனிதரைப் போன்று காட்சியளித்தாலும் முழுக்க முழுக்க நூராகவே இருந்தார்கள் என்பதை அங்கம் அங்கமாகப் பிரித்துக் காட்டப்பட்டு விட்டதைக் கண்டு அக மகிழ்கிறோம். இத்தனைக்குப் பிறகுமா? மனிதனே! அப்புனித நபியை உனக்கு ஒப்பானவரென்று சொல்லப் போகிறாய்? உன்னைச் சொல்லி என்ன பயன். நீதான் கூலிக்கு மாரடிப்பவனாயிற்றே.

மேலும் நாம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை ஜோதி மயமானவர்கள் என்பதற்கு இது போன்ற நபிமொழிகளை ஆதாரமாக எடுத்து வைத்தால் இதைக் காணும் முனாபிக்கீன்கள், பார்த்தீர்களா! நபியவர்களே தமது அங்கங்களை ஒளிமயமாக்குமாறு இறைவனிடம் வேண்டுகிறார்கள். ஆனால் இவர்களோ அந்த நபியை ஜோதி மயமானவரென்று பிரச்சாரம் செய்கின்றனரென்று பாமர மக்களிடம் உரத்த குரலில் உக்கிரமாகக் கேட்கின்றனர். இந்த மாயக்காரர்களின் உரத்த தொனியையும், உடல் பருமனையும் அந்த உடலிலுள்ள நீண்ட தாடியையும் ஜுப்பாவையும் காணும் அப்பாமரர்கள், அதுதானே! இவ்வாறு எப்படிச் சொல்ல முடியும்? என்று அவ்வாய் சவடால்காரர்களுக்கு வெண்சாமரமும் வீசுகின்றனர்.

அவர்கள் கேட்கும் அதே கேள்வியை நாம் இப்படிக் கேட்கிறோம். அதாவது, நீ இறைவனால் கடமையாக்கப்பட்ட பர்ழான தொழுகையைத் தொழுபவனா? அப்படியானால் அத்தொழுகை கலிமாச் சொல்லி முஸ்லிமான ஒருவன் மீதுதான் கடமை. இதில் இஸ்லாம் என்பதுதான் நேரான பாதை. ஆதலால் ஒருவன் இஸ்லாமென்னும் நேரான பாதையில் இருந்துகொண்டு அதில் கடமையாக்கப்பட்ட காரியங்களைச் செய்வானாயின் அவன் நேரான பாதையில் தான் இருக்கிறான் என்பதற்கு அதுதான் அடையாளமாகும். இந்நிலையில் நீ நேரான பாதையில் இருந்துகொண்டே தொழுகையில் சூரா பாத்திஹா என்னும் அத்தியாயத்தைக்கொண்டு இறைவா! என்னை நேரான பாதையில் செலுத்துவாயாக என்று எப்படிப் பிரார்த்திக்கிறாய்? அப்படியானால் அந்நயவஞ்சகர்களது பாதையிலா நீ இருக்கிறாய்? அல்லது நீ இப்போதுள்ள பாதை நேரான பாதைதான் என்பதில் உனக்குச் சந்தேகமா? இப்படிப்பட்ட ஓர் நிலையில் நீ கலிமா சொன்ன போதிலும் தொழுத போதிலும் கூட வழிகேட்டில் தானிருக்கிறாய் என்பதைத் தெரிந்துகொள். இன்னும் நீ மட்டுமா சூரா பாத்திஹாவின் அந்த வசனத்தை ஓதினாய்? உன்னை நேர்வழியில் நடத்தவந்த, நேர்வழியாளராக வந்த, இவ்வகிலத்தையே நேர்வழியில் அழைத்துச் சென்ற உனது ரஸூலாகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும் அல்லவா ஓதியிருக்கிறார்கள்! இதற்கு நீ என்ன பதில் தரப் போகிறாயோ அதுதான் நாம் உனக்குத் தரும் பதிலாகும்.



அடுத்து நபியவர்கள் உனது கூற்றின்படி ஜோதியானவர்களல்ல. அவர்களது எந்தவொரு அங்கமும் நூராக முடியாதெனில் அவர்கள் தனது ஒவ்வொரு அங்கத்தின் பெயரையும் சொல்லிச் சொல்லி அவைகளை எல்லாம் ஒளியாக்குவாயாக என்று ஏன் பிரார்த்தனை புரிந்தார்கள்? ஒளியாலான ஒருபொருள் மனிதனாக முடியாதெனில் தன்னை நூரானிய்யத்தான மனிதனாக்குவாயாக என்று பிரார்த்திக்க வேண்டிய அவசியமென்ன? ஒளிமயமான ஒருவர் எல்லா மனிதர்களுக்கும் இருப்பதைப் போன்ற அங்கங்களை உடையவராக இருக்க முடியுமென்பதை அந்த நபியவர்களின் பிரார்த்தனையைக் கொண்டேனும் உன்னால் புரிந்துகொள்ள முடியவில்லையா?

முஃமின்களான விசுவாசிகளால் ஒரு கருத்துச் சொல்லப்பட்டால் அதைப் பொய்யாக்க புகாரியில் உண்டா? முஸ்லிமில் உண்டா? என்றெல்லாம் கேட்கிறாய். அதை இந்நூலின் துவக்கத்திலிருந்து நாம் கூறிவந்த, நபியவர்கள் அல்லாஹ்வின் முதல் படைப்பு. அந்த ஜோதிதான் மனிதராகக் காட்சியளித்ததென்று சொன்னோம். இப்படி நாம் சொன்ன அனைத்தையும் அக்குவேறு ஆணி வேராகப் பிரித்துக் காட்டியிருக்கிறது புகாரியிலும் முஸ்லிமிலும் உள்ள நபிமொழிகள்.

பின்னும் நபியவர்கள் இரத்தம், சதை, முடி, எலும்பு, தோல், உள்ளம், பார்வை, கேள்வி, முற்பகுதி, பிற்பகுதி, முன், பின், வலது, இடது என எல்லாமே நூராகத்தான் படைக்கப்பட்டிருந்தார்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? எனக் கேட்டால் அதற்கு புகாரி

முஸ்லிமிலுள்ள இன்னொரு ஹதீதைக் காட்டி இதற்கென்ன பதில் என்று நம்மிடம் கேட்கிறார்கள். ஒன்று மட்டும் நமக்கு மிக நன்றாகத் தெரிகிறது. அது; அல்லாஹ் உங்களை நேர்வழியில் நடத்த விரும்பவே இல்லை என்பதை இவர்களே ஊர்ஜிதப் படுத்துகின்றனர் என்பது தான். அரபிமொழி தெரியுமென்பதற்காக குர்ஆன் ஹதீதின் வாக்கியங்களுக்குரிய (வெளிப்படையான) அர்த்தத்தை மட்டும் சொல்ல முனைந்தால் அதன் விளைவு என்னவாகும் என்பது கூடவா உங்களுக்குத் தெரியாது? ஒரு குர்ஆனுடைய வசனத்திற்கு அல்லது ஒரு ஹதீதுக்கு முன்னாலும் பின்னாலும் சொல்லப்பட்ட விஷயத்தோடு தொடர்புள்ளதா? அது இறக்கப்பட்ட அல்லது சொல்லப்பட்ட நேர கால சூழ்நிலைகள் என்ன? என்பனவற்றை எல்லாம் நீங்கள் கவனத்தில் கொண்டிருந்தால் இந்தக் கேள்வியையே கேட்டிருக்க மாட்டீர்கள். பின்னும் ஒரு வாக்கியத்தின் வெளிப்படையான அர்த்தத்தை மட்டுமே நீங்கள் எடுத்துக் கொள்பவர்களாதலால் உங்கள் பாணியிலேயே உங்களிடம் சில கேள்விகளை சில ஹதீதுகளை முன்வைத்துக் கேட்கிறோம்.

حدثنا اسماعيل قال: حـــدثني مالك عن ابى النضر مولى عمر بن عبيدالله عن ابى سلمة بن عبدالرحمن عن عائشـــة زوج النبي صلى الله عليه وآله وسلم إنها قـــالت: كنت أنام بين يدي النبي صلى الله عليه وآله وسلم ورجلاي في قبلته فإذا سجد غمزني فقبضت رجليّ فإذا قام بسطتهما قالت: والبيوت يومئذ ليس فيها مصابيح

**“நான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் முன்பாக தூங்கிக் கொண்டிருந்தேன். அப்போது எனது இரு பாதங்களும் நபிகளாரை நோக்கி நீட்டியிருந்தன. நபியவர்கள் ஸுஜூது செய்யும் போதெல்லாம் என்னை அகற்றுவார்கள். அதனால் எனது பாதத்தை முடக்கிக் கொள்வேன். அதுபோது வீட்டில் விளக்கு ஏதுமிருக்கவில்லை என்பதாக அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா கூறுகின்றனர்.”** (நூல் : புகாரி ஷரீப், கிதாபுஸ் ஸலாத்தி, பாபுஸ் ஸலாத்தி அலல்



பிராஷி பாகம்-1, பக்கம்-201. முஸ்லிம் ஷரீப், கிதாபுஸ் ஸலாத், பாபுல் இஃதிராழி பைன யதையில் முஸல்லி.)

நபியவர்கள் நூரானவர்களல்ல என்று வாதிப்போர் இந்த ஹதீதையும் எடுத்துக்காட்டி, பார்த்தீர்களா! நபிகளாரின் அருமைத் துணைவியார் நபியவர்கள் வீட்டிலிருக்கும் போது விளக்கில்லாமல் இருட்டாக இருந்ததால் தான் நபியவர்கள் ஸுஜூது செய்தது அவர்களுக்குத் தெரியாமல் போய் விட்டதென்று கூறுகின்றனர்.

இன்னும் இந்த ஹதீது இடம்பெற்றுள்ள புகாரி ஷரீபின் நூலுக்குரிய விரிவுரையாளர்களான இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி ரஹிமஹுல்லாஹ் தமது உம்தத்துல் காரி என்னும் நூலின் பாகம்-4, பக்கம்-114லும், முஸ்லிம் ஷரீபின் விரிவுரையாளரான இமாம் நவவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள்,–

**“வீட்டில் வெளிச்சம் இல்லாதிருந்ததால் தான் நபியவர்கள் ஸுஜூது செய்யும் போதெல்லாம் என்னை நகர்த்த வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டது. அவ்வாறு இல்லையேல் நானாகவே பாதத்தை நகர்த்தியிருப்பேன்”** என்று கூறப்பட்டிருப்பதையும் எடுத்துக் காட்டி நபியவர்கள் ஒளிமயமானவர்களாக இருப்பின் பின்னர் வீடு ஏன் இருளடைந்திருந்ததென்றும் நம்மைப் பார்த்து ஆவேசமாகக் கேட்கின்றனர். இதற்குரிய பதிலைப் பார்க்குமுன் இந்த ஹதீதுக்கு புகாரி ஷரீபின் விரிவுரையில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கம் இவர்களால் எடுத்துக் காட்டப்படுவது மட்டும் தானா? அல்லது இன்னும் வேறு ஏதேனும் தரப்பட்டுள்ளதா என்பதைப் பார்த்தால்.,,,

**“இந்த ஹதீத் அன்னையவர்கள் அயர்ந்த உறக்கத்தில் இல்லை என்பதையும் அவ்வாறின்றி அயர்ந்த உறக்கத்தில் இருந்திருப்பார்களேயானால் வெளிச்சம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நபியவர்களின் எந்தவொரு செயலையும் அவர்களால் தெரிந்து கொண்டிருக்க முடியாமல் போயிருக்கும்”** என்றும் விளக்கம் தரப்பட்டிருப்பதை இவர்கள் ஏன் சொல்லாமல் விட்டு விட்டார்கள்?

மேலும் வீட்டில் வெளிச்சமில்லாமல் இருளாக இருந்த போதிலும் நபியவர்கள் ஸுஜூது செய்யும் போது என்னை நகர்த்த, நான் பாதத்தை முடக்கிக் கொள்வேன் என்றும், பின்பு நபியவர்கள் நிலைக்கு எழுந்தவுடன் மறுபடியும் பாதத்தை நீட்டிக் கொள்வேன் என்னும் அன்னையவர்களின் வாக்கியம் அவர்கள் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்துவதோடு நபியவர்கள் ஸுஜூதை விட்டு எழுந்து விட்டார்கள் என்பதை எப்படித் தெரிந்து கொண்டார்கள்?

பின்னும் ஸுஜூத் என்பது அல்லாஹ்வுக்கு மிக மிகப் பிரியமான ஒன்றாகும். ஆதலால் நபியவர்கள் எவ்வளவு நேரம் ஸுஜூதில் இருந்திருப்பார்களென்று குறிப்பிட்டு நம்மால் சொல்ல முடியாவிட்டாலும் மிக நீண்ட நேரம்வரை இருந்திருப்பார்கள் என்பதை மட்டும் திட்டமாகச் சொல்லலாம். அப்படியானால் அன்னையவர்கள் வேண்டுமென்றே தூங்குவதைப் போல் பாசாங்கு செய்தார்களென்று சொல்ல முடியுமா? இன்னும் நபியவர்கள் இரவு காலங்களில் தொழுவார்களென்பது அவர்களுக்கு தெரிந்துதானே இருக்கும்! பின் எப்படி நபிய்வர்கள் ஸுஜூது செய்யும் பக்கமாக காலை நீட்டித் தூங்கினார்கள்? அல்லது குறைந்த பட்சம் நபியவர்கள் தாம் தொழுவதற்கு முன் அவர்களை நகரச் செய்திருக்கலாமல்லவா? இதன்றி இப்பசப்புக்காரர்களின் வாதப்படி நபியவர்களுக்கு தொழுகையில் கூட தமது மனைவியின் சிந்தனை இருந்திருக்கின்றது. அப்படித்தானே!

எனவே முதலில் இந்த ஹதீத் ஹதீதுடைய நூல்களில் எந்தப் பாடத்திற்குரிய பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ளது? இமாம் புகாரி ரஹிமஹுல்லாஹ் அவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த ஹதீதுக்கு விளக்கமளித்த விரிவுரையாளர்கள் அந்த விளக்கத்தைக் கொண்டு எதை நிரூபிக்கின்றார்கள்? என்பதைப் பார்ப்பீர்களாயின் இத்தகைய விளக்கங்களை அவர்கள் தந்ததற்குரிய பதில் தாமாகக் கிடைத்துவிடும் இன்ஷா அல்லாஹ். எனவே இவைகளை எல்லாம் கவனத்தில் கொள்ளாமல் அந்த காத்தமுன் நபியின் மகாத்மியத்தை மண் தோண்டிப் புதைப்பதற்கு அவர்களின் ஹதீதையே அல்லவா பயன்படுத்தப் பார்க்கிறீர்கள். இதுதான் உங்களின் உயிருக்கும் மேலான முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு நீங்கள் தருகின்ற சன்மானமா?



ஆதலால் இந்த ஹதீதின் விரிவுரை நூலான உம்தத்துல் காரியை அருள் கூர்ந்து எடுத்துப் பாருங்கள். வீட்டில் விளக்கில்லாமல் போனதைக் காரணமாக்கி அன்னையவர்களின் வாயிலாக நமக்குக் கிடைத்த அந்த ஹதீத் எப்படிப்பட்ட மார்க்கத்திற்குரிய அத்தியாவசியமான பிரச்னைகளெல்லாம் தீர்க்கப்படுவதற்குரிய சட்டங்களை எல்லாம் தந்ததென்பதை தெரிந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம். ஒரு விஷயத்தைப் படித்துக் கொள்ள வேண்டுமாயின் அதைப் படித்துக் கொடுப்பவரிடம் தன்னை அதற்கு முன் அர்ப்பணிக்க வேண்டியது அவசியமாகும். இதனால் படிப்பவரும் படித்துக் கொடுப்பவரைப் போலாகி விட்டாரென்று சொல்ல முடியுமா? எனவே அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் வேறொரு இடத்தில் நபியவர்களின் வியர்வைத் துளியிலிருந்து நூர் வெளியாயிற்று என்றும் சொன்னார்கள். பகல் காலத்தில் சூரிய ஒளியில் நபியவர்களின் வியர்வையிலிருந்து நூர் வெளிப்பட்டது பார்வைக்குப் புலப்பட்டதெனில் அந்த நூர் இரவு காலத்தில் ஏன் ஒளியேதுமில்லாமல் காணப்பட்டதென்றால் இருளில் எப்படிப்பட்ட வணக்கங்களை எல்லாம் நிகழ்த்தலாம் என்பதை கற்றுத் தருவதற்காகத்தான் என்பதை நாம் நன்கு உணர்ந்துகொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்வாறே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் வீட்டிலிருக்கும் போது ஒளியில்லாமல் இருந்தனர் என்பதை வைத்துக்கொண்டு அண்ணலாரின் அகமியத்தைப் பொய்யாக்க முனையும் நீங்கள் அதே அன்னையவர்கள்,...

**“ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் வெளிச்சத்தில் காணப்படுவதைப் போன்றே இருளிலும் (பிரகாசமாக) காணப்படுவார்கள் என்னும் வார்த்தையை ஏன் சொல்லாமல் மறைக்கிறார்கள்?”**

இன்னும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப்பட்டவர்கள் என்பது மட்டுமின்றி நூராக இருந்தும் மனிதத் தோற்றத்தில் காணப்பட்டார்கள் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி நம்புகின்ற முஃமின்களுக்கு இங்கே நாம் சொல்ல விரும்புவது என்னவெனில், அண்ணல் நபியவர்கள் எல்லா

நேரங்களிலும் ஒரே மாதிரியான மர்தபாவைக் (படித் தரத்தை) கொண்டிருந்தவர்களல்ல. சில நேரங்களில் தம்மை மறந்த நிலையிலும் இன்னும் சில நேரங்களில் ஒரு சாதாரண மனிதரைப் போல் தமது தோழர்களுடன் அன்னியோன்ய மாகக் காணப்படுவதும் உண்டு. இன்னும் மனித குலத்தா ரிடையே மனித சமுதாயத்திற்கு மனிதத் தோற்றத்தைக் கொண்டு ரஸூலாக வருகை தந்திருந்ததால் ஒரு சராசரி மனிதரைப் போலவே தம்மைக் காட்டிக்கொள்ள விரும்பி னார்கள். அவ்வாறே வாழ்ந்தும் காட்டினார்கள். அத்தகைய தோர் நிலையில் நடைபெற்ற நிகழ்ச்சிதான் அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்களால் சுட்டிக் காட்டப் படும் நிகழ்ச்சியாகும். இதை இன்னும் உறுதிப்படுத்த மிஃரா ஜுடைய. சம்பவத்தையும் நாம் ஒரு படிப்பினையாகக் கொள்ளலாம்.

ஆகையால் மனிதத் தோற்றத்திலும் அவர்களின் எதார்த்தமான நூரானிய்யத்துடைய நிலை மிகைத்தவர் களாகக் காணப்பட்டதைப் போலவே இவ்வவனியில் பஷரிய் யத்துடைய நிலையுடையவர்களாகவும் காணப்பட்டார் கள். அத்துடன் வல்லோனாகிய அல்லாஹ்வால் வழங்கப் பட்ட பேருபகாரங்களுக்கும் நிஃமத்துக்களுக்கும் நன்றி செலுத்தும் வண்ணம் தன்னைத்தானே கஷ்டத்திற்கும் பசிக்கும் உட்படுத்திக் கொண்டார்கள்.

இதுவரை அகிலத்தின் அதிபதியாகிய அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப்பட்டது பார் போற்றும் பயகம்பர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதி தானென்பதையும், அந்த ஜோதியிலிருந்து தான் அகில மனைத்தும் தோற்றுவிக்கப்பட்டன என்பதையும், அந்த ஜோதி தான் மக்கமா நகரில் அன்னை ஆமினா ரலியல் லாஹு அன்ஹாவின் வாயிலாக முஹம்மதென்னும் நாமம் தரித்து மனித உருவில் மனிதராகக் காட்சியளித்தது என்ப தையும் நாதாக்களின் நல்லாசியால் சுருக்கமாக உங்களின் மேலான பார்வைக்கு தந்தோம். அத்துடன் இதுவரை விப ரிக்கப்பட்ட விஷயங்களனைத்தும் ஹதீதுகளை ஆதார மாகக் கொண்டே முன்வைக்கப்பட்டதைக் கவனித்திருப் பீர்கள். இனி நபியவர்கள் நூரானவர்கள் என்பதற்குரிய ஆதாரங்களை திருக்குர்ஆனைக் கொண்டு பார்ப்போம்.



## நூரும், குர்ஆனும்

இதில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நூரானவர்கள் என்பதை உறுதிப்படுத்த பல்வேறு குர்ஆனுடைய வசனங்கள் சுட்டிக் காட்டப்படு கின்றன. ஆதலால் இதுவரை சுட்டிக்காட்டப்பட்ட நபி மொழிகளுக்கோ அல்லது அடுத்து சொல்லப்போகும் குர் ஆனுடைய வசனங்களுக்கோ யார் விளக்கம் தந்தாலும் அவ்விளக்கம் எங்கேயிருந்து எதிலிருந்து எடுக்கப்பட்ட தென்பதை ஆதாரப்படுத்த வேண்டும். அவ்வாறின்றி தாமாக ஒரு விளக்கத்தைத் தரக்கூடாது.

மேலும் எடுத்து வைக்கப் போகும் குர்ஆனுடைய வச னங்களுக்கு திருமறை விரிவுரையாளர்களான முபஸ்ஸிரீன் கள் அனைவருமே ஒரே மாதிரியான விளக்கங்களைத் தான் தருகிறார்களென்று சொல்ல முடியாது. அதேநேரம் அவர் கள் தருகின்ற பல்வேறு விளக்கங்களில் நமது நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களும் ஒருவராகக் காட்டப் படுகிறார்களாதலால் நாம் அந்த விளக்கத்துக்கே முன் னுரிமை கொடுத்துள்ளோம். அதற்காக மற்ற விளக்கங் களை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்பது கருத்தல்ல. ஆதலால் வேத வியாக்யானிகள் தந்துள்ள விளக்கங்களில் எல்லாமே நபியவர்களைச் சார்வதில் பாதகம் ஏதுமில்லை என்பதால் சுன்னத் வல் ஜமாஅத்தினர் நபியவர்கள் நூர் என் பதற்கு இவ்வசனங்களையே ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

ஏனெனில் நமக்குக் குர்ஆன் கிடைத்ததென்றால் அது நபியவர்களைக் கொண்டுதான். மேலும் நாம் முஸ்லிம் களாக இருக்கிறோம் என்றால் அதுவும் நபியவர்களைக்

கொண்டுதான். இன்னும் நமக்கு ஹிதாயத்துக் கிடைத்ததென்றால் அதுவும் நபியவர்களைக் கொண்டுதான். எனவே எல்லாமே அவர்கள் தானென்பதால் இவ்வசனங்களும் அவர்களுக்குரியது தானென்றே கூறுவோம்.

பின்னும் இவ்வசனங்களுக்கும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நூர் என்பதற்கும் எந்தத் தொடர்புமில்லை என்று கூறுவோர் வேத வியாக்யானிகளை மட்டுமல்ல. நபித்தோழர்களையும் பொய்யாக்குகின்றனர். இதில் மிக மிக முக்கியமானது சூரா அந்நூரின் 35வது வசனமும் சூரா மாயிதாவின் 15ம் வசனமுமாகும்.

இவ்விரு வசனத்திலும் இடம் பெற்றுள்ள "நூருன்" என்பதற்கு குர்ஆன், ஹிதாயத், இஸ்லாம் என்று பல விளக்கங்கள் தரப்படுகின்றன. இருப்பினும் நூராகிய அந்த குர்ஆன் நாளை மறுமையில் மனித உருவில் வந்து அதனை அதிகமதிகம் ஓதியவனுக்காக அல்லாஹ்விடம் ஷபாஅத்துச் செய்யுமாம். இவ்வாறே தொழுகை, நோன்பு, ஜகாத் போன்றவைகளும் நாளை மறுமையில் மனித உருவில் தோன்றி காட்சி தருவது மட்டுமல்லாமல் அவைகளை நிறைவேற்றியவர்களுக்காக அல்லாஹ்விடம் மன்றாடும் என்பதாகவும் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களால் சொல்லப்பட்டுள்ள ஹதீதுகளைக் கொண்டு நாம் அறிந்திருக்கிறோம்.

உருவமற்ற நூராகிய குர்ஆன் அல்லது ஹிதாயத் அல்லது முன்னால் குறித்துக் காட்டப்பட்டவை நாளை மறுமையில் மனிதத் தோற்றத்தில் வரும் என்பதில் நமக்கு சந்தேகமில்லையானால் குர்ஆனாகவும், ஹிதாயத்தாகவும், இஸ்லாமாகவும் இவ்வுலகில் வந்துதித்த திங்களெங் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நூராக உதயமானார்கள் என்பதில் மட்டும் ஏன் சந்தேகம் கொள்ள வேண்டும்?

இன்னும் இவ்வசனத்தில் குறித்துக் காட்டப்படும் "நூர்" என்பது குர்ஆன் தானேயன்றி நபிகளாரல்ல எனக் கொள்ளப்பட்டால் இன்று ஒவ்வொரு வீட்டிலும் ஒன்றுக்குப் பத்து இருக்கிறதே! அவைகளெல்லாம் ஏன் ஒளிர



வில்லை? நூலுருவில் வடிவமைக்கப்பட்டதால் அதொரு நூர் இல்லை என்றாகி விடுமா? அல்லது அந்த நூருக்கு பங்கம் ஏதும் ஏற்பட்டு விடுமா? அல்லது அது ஒளிதரவில்லை என்பதற்காக அது ஒளியான பொருளல்ல என்று சொல்லலாமா? இல்லையில்லை. அது ஒளிதான். ஆனால் கண்ணால் காணக்கூடிய ஒளியல்ல என்பீர்களானால் நீங்கள் உங்கள் கைகளில் வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே! அதற்குப் பெயர் என்ன? ஒளிக்கு உருவமில்லை. அதனால் ஒரு உருவத்தை எடுக்க முடியாதென்று சொன்னால் உங்கள் கைகளால் அதை எப்படிப் பிடிக்கிறீர்கள்? ஆம். குர்ஆன் ஒரு நூராக இருந்தும் அதைப் பிடிக்கிறீர்கள். அதேநேரம் அது ஒரு நூர் என்பது உங்களுக்குப் புரியவில்லை. அந்த நூரை ஓதுகிறீர்கள். முத்தமிடுகிறீர்கள், சுமந்து செல்கிறீர்கள். இத்தனையும் செய்துவிட்டு நூரால் உருவமெடுக்க முடியாதென்றும் சொல்கிறீர்கள். இது கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்யைத் தேடியலைந்த ஒரு பெரியாரின் தத்துவக் கருத்தைப் போலல்லவா இருக்கிறது.

உங்களின் கண்களுக்கு முன்னாலேயே நடந்து திரியும் நூரையே உணர முடியாத உங்களால் உத்தமத் திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நூரானவர்கள் என்பதை எப்படி ஏற்றுக் கொள்வீர்கள்? இப்போது அதற்குரிய குர்ஆனின் வசனத்தைப் பாருங்கள்.

**வசனம் ஒன்று :-**

الله نور السموات والارض

இந்த வசனத்திற்கு அல்லாஹ் வானங்கள் பூமிகளின் நூராக இருக்கிறான் என்று சொன்னாலும் அல்லது அல்லாஹ் வானங்கள் பூமிகளை நூராக்கக் கூடியவன் என்று சொன்னாலும் அதற்குமுன் அல்லாஹ் நூரானவனா? என்றொரு கேள்வி எழுகிறது. ஆதலால் முதலில் நூர் என்றால் என்ன என்பதை பார்ப்போம்.

**நூர் என்றால்,**

நூர் என்னும் அரபிப் பதம் "லுஃகவி மஃனா" (அகராதி அர்த்தம்) "ஹகீகி மஃனா" (எதார்த்தமான அர்த்தம்)

என்னும் இருவகை அர்த்தங்களைக் கொண்ட ஒரு பதமாகும்.

**லுஃகவி மஃனா**

நூர் என்பதற்குரிய அகராதி அர்த்தத்தை விளக்கும் உலமாக்கள் பின்வரும் பொருளைத் தருகின்றனர்.

الأضواء المدركة بالبصر

**“பார்வைகள் எத்திக் கொள்ளும் பிரகாசங்களாகும்”** *நூல் : ஜாமிவுல் குர்ஆன், பாகம்-6, பக்கம்-169.*

النور الضوء الذي يعين الابصار

**“பார்வைகளுக்கு உதவி செய்யும் ஒளியாகும்”**

*நூல் : அல் முப்ரதாத், பக்கம்-805.*

**“நெருப்பு, சூரியன், சந்திரன் போன்றவைகளால் பூமியின் மீதும் அதன் சுவர்கள் மீதும் பிரதிபலிக்கும் ஒருவகை இனத்தைச் சார்ந்தத பொருளாகும்”**

*நூல் : தப்ஸீருல் கபீர், பாகம்-8, பக்கம்-378.*

النور قائمة بالجسمية وهو ضدالظلمة

**“நூர் என்பது ஜடப் பொருட்களின் உதவியோடு நிலைத்து நிற்கும் ஒன்றாகும். இது இருளுக்கு எதிர்ப் பதமாகும்.”**

*நூல்: தப்ஸீருல் கபீர், இப்னு தைமிய்யா, பாகம்-5, பக்கம்-421.*

النور هي كيفية تدركه به الباصرة

**“பார்க்கக் கூடிய ஒரு வகைப் பொருளாகும்”**

*நூல் : பைழாவி, பாகம்-6, பக்கம்-379.*

ஆக மேற்கண்ட உலமாக்களுடைய விளக்கங்களின் அடிப்படையில் நூர் என்னும் அரபிப் பதம் ஒளி, வெளிச்சம், பிரகாசம் என்னும் பொருட்களைக் கொண்டது என்பதைத் தெரிந்து கொண்டோம்.

மேலும் ஒளி, பிரகாசம் என்னும் பொருட்களைக் கொண்ட “நூரே லுஃகவி”யானது, “நூரே துன்யவீ” (உல



கைச் சார்ந்த ஒளி) என்றும் “நூரே உக்ரவீ” (மறுமையைச் சார்ந்த ஒளி) என்றும் இரு வகைப்படும்.

அதாவது பார்வையால் உணரப்படும் சூரிய, சந்திர, நட்சத்திரங்களின் ஒளிகளை “நூரே துன்யவீயை” (உலகைச் சார்ந்த ஒளியை) “மஹ்ஸூஸ் பில் பஸரா” பார்வையால் உணரக்கூடிய ஒளியென்றும், சிந்தனையால் உணரக் கூடிய குர்ஆன், ஹிதாயத், புத்தி போன்றவைகளை “நூரே உக்ரவீ” (மறுமையைச் சார்ந்த ஒளியை) “மஹ்ஸூஸ் பில் பஸீரா” உள்ளத்தால் உணரக்கூடிய ஒளியென்றும் சொல்லப்படும்.

ஆக நூர் என்னும் அரபிப் பதம் சொல்லின் அடிப்படையில் ஐம்புலன்களால் உணரப்படும் (சூரிய, சந்திர, நட்சத்திரங்களின்) ஒளிகளாக அல்லது உள்ளத்தால் உணரப்படும் (குர்ஆன், ஹிதாயத், புத்தி) ஒளிகளாக இருப்பதால் அல்லாஹ் நூரானவனாக எப்படி இருக்க முடியும்? ஏனெனில் அல்லாஹ் ஐம்புலன்களால் உணரப்படும் “மஹ்ஸூஸான” பொருளோ, அல்லது உள்ளத்தால் உணரப்படும் “மஃகூலான” பொருளோ அல்ல. அவன் இவ்விரண்டை விட்டும் தூய்மையானவன்.

மேலும் நூர் என்பதற்கு ஒளி, பிரகாசம் என்பதாக ஒரே பொருளைக் கொண்ட இரு சொற்களைப் பயன்படுத்தினாலும் இரண்டும் முரண்பட்ட வெவ்வேறு பொருளுக்குரிய வித்தியாசங்களைக் கொண்டிருப்பதால் நூர் என்பதற்கு ஒளியென்று தான் பொருள் கொள்ள வேண்டுமேயன்றி பிரகாசம் என்று பொருள் கொள்ளக் கூடாது. ஏனெனில்.,,,

هوالذي جعل الشمس ضياء والقمر نورا

**“அவன் எப்படிப்பட்டவன் எனில் சூரியனைப் பிரகாசமுடையதாவும் சந்திரனை ஒளியானதாவும் வெளிப்படுத்தினான்.”** *(சூரா யூனுஸ், வசனம்-5.)*

## நூருன், ழௌவுன் பற்றிய வித்தியாசம்

ஒளி, வெளிச்சம், பிரகாசம் என்பவைகளெல்லாம் ஒரே கருத்தைக் கொண்ட பல வாக்கியங்கள் என்பதாக நாம் படித்திருந்தாலும், பொருள் கூறினாலும் மேற்கண்ட திருமறை வசனம் சூரியனை பிரகாசமானதென்றும், சந்திரனை ஒளியானதென்றும் கூறுவதை நாம் பார்க்கும்போது இரண்டும் ஒரே பொருளாகவோ அல்லது ஒரே பொருளைக் கொண்டதாகவோ இருக்க முடியாதென்றே தோன்றுகிறது.

**வித்தியாசம் ஒன்று :-**

இமாம் அல்லாமா ராகிப் இஸ்பஹானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இதைப்பற்றி விளக்கும் போது.,,,

وتخصيص الشمس بالضوء والقمر بالنور من حيث أن الضوء أخص من النور

**“சூரியனை ழௌவுன் (பிரகாசமானதென்றும்) சந்திரனை நூருன் (ஒளியானதென்றும்) பிரித்துக் காட்டியது ஒளியைவிட பிரகாசம் தனித்தன்மை வாய்ந்ததாகும் என்பதாலேயே என்று கூறுகின்றனர்.”**

*(நூல் : அல் முப்ரதாத், பக்கம்-508.)*

**வித்தியாசம் இரண்டு :-**

இன்னொரு பொருளில் இருந்து ஒளியைப் பெற்று தானொரு ஒளியான பொருளைப் போன்று தோற்றமளிக்கும் ஒரு பொருளையே நூர் என்றும், இயற்கையிலேயே ஒரு ஒளியை தனக்குள் கொண்டிருக்கும் பொருளை ழியாவுன் என்று சொல்லப்படும் என்பது ஆய்வாளர்களின் கணிப்பாகும்.

சூரியன் ஒளியான பொருளாக இருப்பதால் அதை ழியாவுன் என்றும், சந்திரன் சூரிய ஒளியின் எதிரொளியாக இருப்பதால் அதை நூருன் என்றும் வர்ணிக்கப்படுகிறது. எனவே நூரைவிட ழௌவுன் மேலானதாகும்.

**இன்றைய விஞ்ஞானம் :-**

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே புனிதமிகு திருக்குர்



ஆன் சூரிய சந்திரனாகிய இரண்டையும் நூர் என்றோ ழியாஃ என்றோ ஒரே சொல்லில் வர்ணிக்காது இரண்டையும் தனித்தனி வார்த்தைகளால் வர்ணித்து அவ்விரண்டுக்குமுள்ள வித்தியாசத்தை தெளிவுபடுத்திய உண்மையை இன்றைய விஞ்ஞானம் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மாறாக வேறு வழியின்றி ஏற்றுக் கொண்டுமுள்ளது.

இன்றைய விஞ்ஞான ஆய்வுகளின் தீர்ப்பென்னவெனில் சந்திரன் பூமியின் வடிவமைப்பை ஒத்த ஒன்றாகும். சந்திரனின் ஒளி அதனுடையதல்ல. அது ஒரு ஒளியான பொருளுமல்ல. பூமிக்கு சூரியனுடைய ஒளி கிடைப்பதைப் போல சந்திரன் போன்ற மற்ற கிரகங்களுக்கும் கிடைக்கிறது. இதனால் தான் சூரியனுடைய ஒளியைப் பெற்ற அப்பொருட்கள் தூரத்திலிருந்து பார்க்கும்போது அவைகளும் ஒளியுள்ள பொருட்களைப் போல் தெரிகின்றன. பின்னும் சந்திரனுக்குச் சென்று பூமியைப் பார்ப்போமாயின் பூமியிலுள்ளோருக்கு சந்திரன் ஒளியாகத் தெரிவதைப் போல சந்திரனில் இருப்போருக்கு பூமி ஒளியாகத் தெரியும் என்றும் கூறுகின்றனர்.

எனவே நூர் என்னும் அரபிப் பதத்திற்கு இதுவரை சொல்லப்பட்ட பல்வேறு வகையான கருத்துக்களின் முடிவின்படி அது ஐம்புலன்களால் உணரப்படும் பொருளாக அல்லது சிந்தனையால் உணரப்படும் பொருளாக இருப்பதால் அல்லாஹ் தனது தாத்திலே நூரானவனாக இருக்க முடியாதென்பதை இப்பதத்தின் அகராதிப் பொருளுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற அறிஞர்களது தீர்ப்பாகும். அதேநேரம் இப்பதத்திற்குரிய இரண்டாவது பொருளுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற அறிஞர்கள் அல்லாஹ் தாத்திலே நூரானவன் எனக் கூறுகின்றனர். இவர்களது விளக்கம் இந்நூலில் கொடுக்கப்படவில்லை.

முதல் தரப்பைச் சார்ந்த அறிஞர்கள் தமது கூற்றை நிரூபிக்க “அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி வல் அர்ழி” என்னும் திருமறை வசனத்தையும் வேறுசில வசனங்களையும் கொண்டு வருகின்றனர். அவையானது.,,,

விளக்கம் ஒன்று:- "அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி வல் அர்ழி" அரபி இலக்கணத்திற்குரிய (நஹ்வு) அடிப் படையில் அதன் தர்கீப் (பல வார்த்தைகளை ஒருங்கிணைப் பதற்கு அரபி மொழியில் பயன்படுத்தப்படும் ஒரு பதமா கும்) என்னவென்று பார்ப்போமாயின் அல்லாஹ் தனது தாத்திலே நூரானவன் என்பதும் "மஸலு நூரிஹீ" என்பதற் குரிய தர்கீப் என்னவென்று பார்ப்போமாயின் அல்லாஹ் தனது தாத்திலே நூரானவனல்ல என்பதும் புரியவரும். அரபி இலக்கண சட்டத்தின்படி இது சாத்தியமற்ற ஒன்றாகும்.

இன்னொன்று, "அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி வல் அர்ழி" இதில் அல்லாஹ் என்பது முப்ததாவா (எழுவாயா) கவும் நூருஸ் ஸமாவாத்தி வல் அர்ழி என்பது முழாஃப் முழாஃப் இலைஹி சேர்ந்து கபர் - பயனிலையாகும். அதா வது எழுவாயும் பயனிலையும் சேர்ந்து அல்லாஹ் தனது தாத்திலே நூரானவன் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

அடுத்து "அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி வல் அர்ழி" என்னும் வசனத்தின் அடுத்த தொடரான "மஸலு நூரிஹீ" என்பதில் நூர் என்பதிலுள்ள "ஹீ" என்னும் அட்சரம் மீளும் ஸ்தலம் அல்லாஹ் என்பதாகப் பொருள் சொல்லப்படுகிறது. இது தவறாகும். ஏனெனில்,

ஒரு சொல் இன்னொரு சொல்லோடு இணைக்கப் பட வேண்டுமாயின் அவ்விரு சொற்களும் வெவ்வேறு இனத்தைச் சார்ந்ததாக இருக்க வேண்டுமென்பது தான் இலக்கணத்திற்குரிய தீர்ப்பாகும். உதாரணமாக ஃபரஸு ஸைதின் - ஸைதுடைய குதிரை என்று சொல்லப்பட்டால் இதில் ஸைது என்னும் பொருள் குதிரை என்னும் பொரு ளோடு இணைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இதில் இவ்விரு பொருட்களும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்த தாக இருப்பதைப் பாருங்கள்.

இதுபோன்றே "மஸலு நூரிஹீ" என்பதையும் கொஞ் சம் கவனியுங்கள். அதாவது நூரிஹி - அவனு (அல்லாஹ்வு) டைய நூர் என்பது இதன் பொருளாகும். இங்கே அல்லாஹ் என்னும் பொருளோடு நூர் என்னும் பொருள் இணைக்கப்



பட்டுள்ளது. இதில் இணைக்கப்படும் இவ்விரு பொருட் களும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டி யது அவசியமென்னும் இலக்கணச் சட்டத்திற்கு இவ்வசனம் நேர் முரணாகவல்லவா இருக்கிறது.

இன்னும் இலக்கணம் என்பது குர்ஆனிலிருந்தே உரு வாக்கப்பட்ட ஒன்றென்பதால் இலக்கணத்திற்கு குர்ஆனோ அல்லது குர்ஆனுக்கு இலக்கணமோ முரண்பாடு கொண்ட தாக இருக்காது. அப்படியானால் இவ்வசனத்தில் குறித்துக் காட்டப்படும் "நூரிஹி" என்பதற்குரிய பொருள் அல் லாஹ்வுடைய நூர் என்பதல்ல. அது இன்னொருவரின் நூர் என்பதே அதற்குப் பொருளாகும். பின்னும் அது வேறொரு வருடைய நூர் என்றால் இந்நிலையில் அல்லாஹ் தனது தாத் திலே நூரானவனல்ல என்பது ஊர்ஜிதமாகிறது. மேலும் இவ்வசனத்தின் இறுதியில் இடம் பெற்றுள்ள "யஹ்தில் லாஹு லி நூரிஹி" என்பதிலும் "மஸலு நூரிஹி" என்பதில் காணப்பட்டதைப் போன்ற சட்டமே காணப்படுகிறதாகை யால் ஒரே வசனத்தில் ஒரு இடத்தில் அல்லாஹ் தனது தாத்திலே நூரானவன் என்றும், இரு இடங்களில் நூரான வனல்ல என்றும் நமக்குத் தெரிய வருகிறது. இப்படி வரக் கூடாது. அப்படியானால் அல்லாஹ் தனது தாத்திலே நூரானவனா இல்லையா?

**விளக்கம் இரண்டு :-**

"மஸலு நூரிஹி" என்பதில் இடம் பெற்றுள்ள ழமீ ரின் மீளும் ஸ்தலம் அல்லாஹ் தான். ஆதலால் இதில் இடம் பெற்றுள்ள இழாஃபத்தானது பயானிய்யா (ஒன்றை விபரிப் பதற்காகவே) உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. எனவே அல்லாஹ் தனது தாத்திலே நூரானவன் தானென்று சொல் லப்பட்டால் அல்லாஹ் தனது தாத்துக்கு ஒரு உவமை சொல்ல வேண்டி வரும்.

ஆனால் அல்லாஹ் தனது செயல்களுக்குத்தான் உதா ரணத்தின் மூலம் பேசுவானேயன்றி அவனது தாத்திலல்ல. ஏனெனில் "லைஸ கமிஸ்லிஹீ ஷைவுன்" அல்லாஹ்வுக்கு உதாரணம் எதுவுமில்லை என்று அல்லாஹ்வே தெளி வாகச் சொல்கிறான்.

**விளக்கம் மூன்று :-**

இன்னும் அல்லாஹுத் தஆலா திருமறையின் சூரா அன்ஆமின் முதல் வசனத்தில் "வ ஜஅலழ் ழுலுமாத்தி வந் நூர்" என்பதில் ழுலமாத் (இருளையும்) நூர் (ஒளியையும்) படைத்தவன் அவனே என்று சொல்கிறான். எனவே நூர் என்பது அல்லாஹ்வால் படைக்கப்பட்ட ஒரு சிருஷ்டி யாகும். இவ்வாறே சூரா பகராவில் "யுக்ரிஜுஹும் மினழ் ழுலுமாத்தி இலன் நூரி" என்றும், இவ்வாறே சூரா அஸ் ஸுமரின் 41ம் வசனமும் அல்லாஹ் தனது தாத்திலே நூரான வனாக இருக்க முடியாதென்பதையே தெளிவுபடுத்து கின்றது.

எனவே அல்லாஹ் தனது தாத்திலே நூரானவனல்ல எனில் "அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி வல் அர்ழி" என் னும் வசனத்தில் நூர் என்னும் பதம் பிறகு ஏன் உபயோகப் படுத்தப்பட்டது என்னும் கேள்வி எழுவதால் இதற்குரிய பதிலைச் சொல்லும் அறிஞர் பெருமக்கள் இவ்வசனத்தில் "நூர்" என்னும் பதம் மஜாஸ் முர்ஸலாவாக அல்லது இஸ்தி ஆராவாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளதென்று கூறு கின்றனர்.

அதாவது ஒரு சொல்லைப் பிரயோகித்து இன் னொன்றை அதைக்கொண்டு நாடுவதற்கு மஜாஸ் முர்ஸல் என்று சொல்லப்படும். இதற்கு ஒரு காரணத்தைக் காட்டி அதற்குரிய காரியத்தை நாடுதல் என்றும் சொல்லலாம். இப் படிக் கையாளப்பட்டதற்கு குர்ஆனில் பல்வேறு ஆதாரங் கள் உள்ளன. இவ்வடிப்படையில் நூர் என்ற பதத்திற்கு அறி ஞர் பெருமக்கள் எந்தெந்த வகையில் எல்லாம் விளக்கமளித் துள்ளனர் என்பதை இனி பார்ப்போம்.

**நூர் பி மஃனா ஹாதி :-**

**"ஹழ்ரத் ஸஹ்ல் பின் அப்தில்லாஹ் ரலியல் லாஹு அன்ஹு அவர்கள்" அல்லாஹு நூருஸ் ஸமா வாத்தி" என்பதற்கு "அல்லாஹு ஹாதி அஹ்லிஸ் ஸமாவாத்தி" அல்லாஹ் வானம் பூமியிலிருப்போர்க்கு நேர்வழி காட்டுபவன் என்பது பொருளாகுமென்று கூறுகின்றனர்."** (நூல் : தப்ஸீர் ரூஹுல் பயான்)



ஹழ்ரத் ஸஹ்ல் பின் அப்தில்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாக ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் முன்மொழியப்பட்ட கருத்தைத்தான் அல்லாமா காழி இயாழ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது அஷ்ஷிபா என்னும் நூலிலும் குறிப்பிட் டுள்ளனர். அடுத்து,

**"உங்களை ழுலுமாத் (குப்ரிய்யத்) என்னும் இருளி லிருந்து நூர் (ஹிதாயத்) என்னும் ஒளியின்பால் கொண்டு வருவதற்காக"** (சூரா அஹ்ஸாப், வசனம்-43.)

**"அல்லாஹ் எவருடைய இதயத்தை இஸ்லாத்திற் காக விசாலமாக்குகின்றானோ அவர் தமது இறைவ னின் (ஹிதாயத் - நூர் என்னும்) ஒளியில் இருக்கிறார்.**
(சூரா அஸ்ஸுமர், வசனம்-22.)

இன்னும் இதுபோன்ற சில வசனங்களையும் முன் வைத்து இவ்வசனங்கள் அனைத்திலும் ஹிதாயத் என்பதை நூர் என்னும் பதத்தைக் கொண்டு பேசுகிறான். எனவே அல் லாஹ் வானங்கள் பூமிகளின் நூராக இருக்கிறான் எனில் அவைகளில் வாழுவோரை நேர்வழிப் படுத்துபவன் என்பது தான் அதற்குரிய பொருளாகும் என்று கூறுகின்றனர்.

**நூர் பி மஃனா முனவ்விர் :-**

ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இவ்வசனத்தில் காணப்படும் நூர் என்னும் பதத் திற்கு முனவ்விர் என்பதாகவும் பொருள் தருகின்றனர். இக் கருத்துக்கே பெரும்பான்மையான குர்ஆனின் விரிவுரையா ளர்கள் முன்னுரிமை கொடுத்துள்ளனர். இன்னும் இமாம் களான ஹழ்ரத் இப்னு ஜரீர், ஹழ்ரத் இப்னு அபீ ஹாத்திம், ஹழ்ரத் இமாம் பைஹகீ ரலியல்லாஹு அன்ஹும் போன் றோரும் இக்கருத்தையே கூறியுள்ளனர்.

**"முனவ்விர் என்பதாக விளக்கம் தரப்பட்டாலும் இமாம் ஹழ்ரத் ஹஸன் பஸரீ, ஹழ்ரத் ழஹ்ஹாக், ஹழ்ரத் அபூ ஆலியா போன்றோர் அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி என்பதை ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலி**

**யல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹு நவ்வரஸ் ஸமாவாத்தி வல் அர்ழி என்று ஓதியதாகவும் குறிப் பிடுகின்றனர். இதோர் அரிதான கிராஅத்தாகும்."**

(நூல் : தப்ஸீர் ரூஹுல் மஆனி)

அல்லாஹு நவ்வரஸ் ஸமாவாத்தி என ஓதப்பட்ட தாக பதிவாகியுள்ள ஹதீதை அல்லாமா இமாம் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அல் இத்கான் ஃபீ உலூமில் குர்ஆன் என்னும் நூலில் இது பலவீனமான ஹதீத் என்று கூறுகின்றனர்.

**நூர் பி மஃனா முதப்பிர் :-**

அல்லாமா இமாம் ஸையித் மஹ்மூத் ஆலூஸி மற்றும் ஹழ்ரத் இப்னு ஜரீர் ரஹிமஹுமல்லாஹ் போன்றோர்,

**நூர் என்றால் முதப்பிர் என்பதாகும் அதாவது, அல்லாஹ் வானம் பூமியிலுள்ளோரை ஆளுபவன் எனக் கூறியதாக பதிவு செய்துள்ளனர்.**

(நூல் : தப்ஸீர் ரூஹுல் மஆனி)

அல்லாஹ் வானம் பூமி மற்றும் அவைகளில் உள் ளோரை மிகவும் தத்துவமான முறையில் அழகான விதத் தில் வழிநடத்துவதால் நூர் என்பதாகும்.

**"ஒரு கிராமத்தின் அல்லது ஒரு தேசத்தின் தலை வன் தனது மக்களை பிரச்னைகள் ஏதுமின்றி நன் முறையில் செழிப்போடு வழி நடத்துவானாயின் அவனை "நூருல் பலத்" ஊரின் ஒளி எனச் சொல்லுவ துண்டு என்பதாக இமாம் அஸம்முன், இமாம் ஸுஜ் ஜாஜ் ரஹிமஹுமல்லாஹ் போன்றோர் கூறுகின்றனர்."**

(நூல் : தப்ஸீர் இப்னு ஜரீர்)

**"இவ்வாறே ஹழ்ரத் முஜாஹித் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் நூர் என்பதற்கு முதப்பிர் என் னும் பொருளையே கொண்டிருந்தனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்க ஒன்றாகும்."** (நூல் : ரூஹுல் மஆனி)



**நூர் பி மஃனா நாழிம் :-**

சில வேத வியாக்யானிகள் நூர் என்பதற்கு நாழிம் (கட்டளையிடுபவன்) என்றும் கூறுகின்றனர்.

**"அல்லாஹ் வானம் பூமிகளின் நூர் என்றால் வானம் பூமியுடையோருக்கு கட்டளையிடுபவன் என்பதாக விளக்கமளிக்கின்றனர்."**

(நூல்: ரூஹுல் மஆனி)

**நூர் பி மஃனா முபர்ரஃ மின் குல்லில் உயூப் :-**

**"நூர் என்பது எல்லா வகையான குறைபாடுகளை விட்டும் தூய்மையான பரிசுத்தமான ஒன்றுக்குச் சொல் லப்படும். அரபியர் பரிசுத்தமான பெண்ணை இம்ர அத்துன் நௌரா எனக் கூறுவதுண்டு."**

**நூர் பி மஃனா முஜீத் :-**

**"தேர்ச்சி பெற்ற உலமாக்களில் சிலர் இவ்வசனத் தில் பேசப்படும் நூர் என்னும் பதத்திற்கு முஜீத் (உரு வாக்குபவன்) எனப் பொருள் தருகின்றனர். ஏனெனில் அல்லாஹ் தான் வானம் பூமிகளை இல்லாமையி லிருந்து உருவாக்கினான் என்பதாக விளக்கமளிக் கின்றனர்."**

ஆதலால் அல்லாஹ் வானங்கள் பூமிகளின் நூராக இருக்கிறான் என்றால் வானம் பூமியிலுள்ளோர்க்கு ஹிதா யத்தைக் கொடுப்பவன் என்றும், வானம் பூமியில் வாழு வோரை வழி நடத்துபவன் என்றும், வானம் பூமிகளை ஆட்சி செய்பவன் என்றும், வானம் பூமிகளை உருவாக்கிய வன் என்றும், வானம் பூமிகளில் இருப்போருக்கு கட்டளை பிறப்பிப்பவன் என்றும், வானம் பூமிகளை பிரகாசிக்கச் செய்பவன் என்றும் பல்வேறு வகையான விளக்கங்களை கண்டோம். இந்த விளக்கங்களனைத்தும் அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி வல் அர்ழி என்னும் ஒரேயொரு வச னத்திற்குரிய விளக்கங்களாகும். அடுத்து இதே வசனத்தின் தொடர்ச்சியில் பேசப்படும் இன்னொரு நூர் எது என்ப தைப் பற்றி இப்போது பார்ப்போம்.